# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900ஹூ செப்டம்பர்மீ 20உ {புத்தகம். 2.


## †பாரதஸாரம்.

### அத்தியாயம். II. (ஆதிபருவம்)
### (பாரதவீரர்களின் இளமைப்பருவம்).

(16-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பீஷ்மாசாரியர் கொண்டுவந்த கன்னிகையைச் சந்தனுமகாராஜா கண்டு ஆனந்தங்கொண்டு தன்னருமைப் புதல்வனை ஆசிர்வதித்து நின்றதும்,

"அம்புவி யரசன் மாமனு மரசனடிபணிந் தவயவத் தழகா [துனைத்தா
லும்பரும் வியக்குங் கிளியைமுன் விறுத்தி யொடுங்கினன் வாய்புதைத்
னெம்பெரு மானீ கேட்டரு ளுனக்கே யிசைந்தமெய்த் தவம்புரி யிவளை
வம்பவிழ் மலர்மா தென்பதே யன்றி வலைஞர்மா மகளெனக் கருதேல்."

என்றதன் மேலும் வலைஞர்தங் தலைவன் தன் மகளுடைய வரலாற்றை முற்றுஞ்சொல்லி முடித்தான். பிறகு சந்தனு மகாராஜா,

"இன்று நற்றின மென்றிளர் தோகையை
மன்ற லெய்தினன் மாநிலம் வாழ்த்தவே."

அவளுடன்சேர்ந்து அநேகநா ளின்புற்றிருந்து சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்றான். இவன் இறுதிக்காலத்தில் இவ்விரு புத்திரர்களையும் பீஷ்மரிடம் ஒப்பித்து இவ்வுலகம்விட்டு விண்ணுலக மடைந்தான். இவரில் மூத்தவனாகிய சித்திராங்கதனுக்கு இவர் பட்டஞ் சூட்டுவித்து இருவரையும் எல்லாவிதங்களிலும் தாம் பாதுகாத்துவந்தார். கொஞ்சக்

† Adapted from Mrs. Annie Besant's **MAHABHARATA**.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.

காலத்திற்குள் சித்திராங்கதன் ஒருயுத்தகளத்தில்மடிந்தான். மடியவே அவன் சகோதரனுகிய விசித்திரவீரியனைத் தான் சிம்மாசனுதிபதியாக்கி அரசு புரியும்படி செய்துவந்தார். இவனுக்குத் தக்க பருவம் வந்து விட்டபடியால் சலக்ஷணமுள்ள ஒரு கன்னிகையைப்பார்த்து மணவினை முடிக்க வெண்ணினுர் பீஷ்மர். அக்காலத்தில் மணமகள் ஸ்வயம்வரத்தில் வரனை அடைகிறது வழக்கமாயிருந்தது. அதாவது மணமகளே தன் கண்ணுக்கு ரம்மியமான புருஷனை அதற்காகக் கூடிய சபையினின்றுந் தேர்ந்தெடுத்து அவனுக்கு மாலை சூட்டுவது வழக்கம். இதற்குத்தான் ஸ்வயம்வரமென்றுபெயர். அத்தருணத்தில் அநேக ராஜராஜாக்களுங்கூடித் தங்கள் தங்கள்புஜபல பராக்கிரமங்களை யெல்லாம் காட்டுவது வழக்கம். இவற்றிலெல்லாம் யார் சிறந்து விளங்குகிருனே அவன்தான் அப்பெண்ணை அடைதல்கூடும். அந்தக் காலத்திற் காசிராஜாவின் புத்திரிகளாகிய அம்பை, அம்பிகை, அம்பாலிகைஎன்னு மூவருடைய கலியாணத்திற்காக ஸ்வயம்வரம் நாட்டப் பெற்றிருந்தது. விசித்திர வீரியனே அதிக இளம்பிராய முள்ளவன். ஸ்வயம்வரத்திற்கு வரும் எல்லா அரசர்களையும் வென்று கன்னியரைக் கொண்டு வருவதற்கோ இவனுக்குப்போதுமான சாமர்த்தியமில்லை. பீஷ்மர் இவனுக்குப் பதிலாகப்போய் மூன்றுபெண்களையும் தம்மிரதத்தில் ஏற்றிவைத்துக்கொண்டு எல்லா அரசரையும்பார்த்து "ஓ அரசர்களே! ஸ்வயம்வரத்தில் எந்த அரசனும் மணமகளைத் தன் வலிமையினுற் கொண்டுபோகலாம். வேறு யாரேனும் அப்பெண்களை விரும்பும் பக்ஷத்தில் எவன் கொண்டுபோய் விட்டானே அவனைப் புறங்கண்டு பெண்களை மீட்டுக்கொண்டு போகலாம். இதுவும் சாஸ்திரத்திற்கொத்த நடபடிக்கைதான். சாஸ்திரப்படி நான் இப்போது நடந்தேன். வேண்டுமானுல் உங்களில் யாவராயினும் என்னுடன் போர் புரிந்து இப்பெண்களைக் கொண்டுபோகலாம்" என்றார். உடனே அங்கிருந்த அரசர்களெல்லாம் அதிக கோபங்கொண்டு இவரை யெதிர்க்கவே இவர் தனிமையாய் எல்லாரையும் புறங்காட்டி ஓடும்படிசெய்து காசிராஜனுடைய பெண்களைத் தம் தம்பிக்கு விவாகம் செய்யும்பொருட்டுத் தம்முடன் கொண்டுவந்து விட்டார். ஒருவன் தன் மகளையும் மருகியையும் உடன்பிறந்தாளையும் பார்ப்பதுபோல் அவர்களைப் பார்த்தாரேயன்றி வேறொரு வித

மான எண்ணங்கள் இவருக்கு ஜனிக்கவேயில்லை. இரதத்தைச்செலுத்திக்கொண்டு வரும்போது மூவரில் மூத்தவளாகிய அம்பை என்பவள் இவரைநோக்கி "நான் வேறொரு புருஷனை என்மனத்திற்கொண்டேன். தயவுசெய்து என்னை விடல் வேண்டும்" என்று வேண்டவே அவளை அனுப்பிவிட்டு மற்றிருவரையும் தன் தம்பிக்கு விவாகம் செய்வித்தார். விசித்திரவீரியன் சிலநாளில்லறம் நடத்திப் புத்திர சந்தானமின்றி இறந்துபோய்விட்டான். புத்திரரில்லாமலிவன் இறந்துபோகவே வம்சம் க்ஷீணதசையடைந்து போகுமேயென்கிற எண்ணம் சத்தியவதியை மிகவும் பிடித்துக்கொண்டிருந்தது.

சத்தியவதி இதனாலதிக மனத்துயரமடைந்து ஏக்கமுற்றிருந்தாள். பிறகோர்நாள் பீஷ்மரை யழைத்து "உன் தந்தையின் குலம் சந்ததியில்லாமல் நாசமாய்ப் போகலாமா? இனியாவது பட்டாபிஷேகம் செய்துகொண்டு விதந்துவாய்ப் போயிருக்கும் அம்பிகை அம்பாலிகை என்னுமிருவரையும் மணந்து புத்திரபாக்கியம் பெற்றுச் சந்தனுவம்சம் இடையறுவண்ணம் காப்பாற்றும்படி யான் உன்னை மிகவும் பிரார்த்தித்து அதிக விநயமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். நீ இதை மறுக்காது உன் அன்னையாகிய என் வேண்டுகோளிற்கு இணங்கல் வேண்டும்" என வேண்டினாள். சிநேகிதர்களும் பந்துக்களும் சத்தியவதி வேண்டிக்கொண்டதுபோலவே பீஷ்மரை மிக்க விநயத்துடன் தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் அரசராய்த் தங்களை அளித்துப் பாதுகாக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இல்லற வாழ்க்கையும் சிம்மாசனமும் தங்களை யேற்றுக்கொள்ளும்படி அவரை நோக்கிச்சென்றன. இவர் அன்று செய்த சபதம்தான் குறுக்கே நின்றது. சபதந்தான்; ஆயினும் என்? பீஷ்மருக்குச் சத்தியத்தினும் மேலான பொருள் வேறொன்றுண்டோ?

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற."

என்பது இவர்க்கும் பொருந்தின தன்றோ? பீஷ்மர் தமது சிற்றன்னையை நோக்கி "அம்மா, தாங்கள் சொல்வது சரிதான். தர்ம சாஸ்திரத்திற்கும் ஒற்றுமையானதுதான். ஆயினும் பிரமசரியத்தையே நான் எப்போதும் விரதமாகக்கொண்டு ஒழுகுவே

னென்றுகூறிய சபதம் உங்களுக்குந்தெரிந்த விஷயந்தானே. என் சபதத்திற்கு விரோதமாய் நடக்கவும் எண்ணுவேனோ ? திரிலோக சாம்பிராஜ்ஜியம் வருவதானாலும் சரி, அல்லது அதனினும் சிறந்த பதவி கிடைக்கிறதா யிருந்தாலுஞ்சரி, அவற்றை யொரு பொருளாக மதிப்பேனோ ? ஒருக்கால் மண் தன் மணத்தை மாற்றினும் மாற்றும் ; ஜலம் தன் குளிர்ச்சியை நீக்கினும் நீக்கும் ; ஒளி தன் உருக்காட்டு மியல்பினை ஒழிக்கினும் ஒழிக்கும் ; வளி தன் பரிசம் மறைக்கினும் மறைக்கும் ; அக்னி தன் சூட்டை யகற்றினு மகற்றும் ; ஞாயிறு தன்னொளி யிழக்கினு மிழக்கும் ; திங்கள் தன் தண்கதிர் விலக்கினும் விலக்கும். விண் தன் ஓசைசெய் யாற்றலை விடுக்கினும் விடுக்கும். விருத்திரனை வென்றோன் தனது ஆண்மை இழக்கினும் இழக்கும். தருமதேவதை நடுவுநிலைமை குன்றி ஒரு புடைச்சாரினும் சாரும். யானோ சொன்னசொல் பிறழேன். தாயே! என்னை மன்னிப்பாயாக" என்றார். சத்தியவதி எவ்வளவு வருத்தத்துடன் பிரார்த்தித்தும் பீஷ்மர் அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்காது மேலும் சொல்லத் தொடங்கினர், "அன்னாய்! சத்தியத்தினின்றும் தவறுதல் க்ஷத்திரியருக் கடுக்குமா ? உன்னுடைய மனவருத்தம் நீங்குமாறு ஒருயுக்தி சொல்லுகிறேன். சந்தனு வம்சம் நாஸ்தியாய்ப்போகக் கூடாதென்பதுதானே உன்னுடைய கோரிக்கை. அதுதான் என்னுடைய விருப்பமும். க்ஷத்திரிய வம்சம் இறுதியடையும்போ லிருக்கும்போது தக்கவர்களைக் கொண்டு புத்திர சந்தானம் பெறுகிறது வழக்கம். இது தொன்றுதொட்டு வழக்கமாய் வந்துகொண்டிருக்கின்றது. ஸ்மிருதியினுடைய அத்தாக்ஷியுமிருக்கிறது. வேண்டுமானாற் பெரியவர்களையும் அழைத்து விசாரித்துத் தகுதியானவற்றைச் செய்யலாம். சந்தேகம்வேண்டுவதில்லை"யென்று அன்னையைத்தேற்றி ஒருபெரிய இருஷியைவரவழைத்து விதந்துவாயிருக்கிற ராஜஸ்திரீகளிடமாகப் புத்திரருண்டாகும்படி செய்யலாம், அப்புத்திரர்கள் விசித்திரவீரியனுடைய புத்திரர்களாகவே மதிக்கப்படுவார்களென்று சொல்லவே சத்தியவதிக்குப் பூர்வஞாபகம் வந்தது. தான் கன்னிகையாயிருந்தபோது தன்னிடம் பராசரருக்கு ஒருபிள்ளை பிறந்ததென்றும், பிறந்தவுடன் தன்னை விட்டுவிட்டு உடனே தன் தகப்பனருடன் அந்தப்பிள்ளை சென்றுவிட்டதென்றும், அந்தப்பிள்ளை

தான் கிருஷ்ண த்வபாயன வேதவியாசரென்றும் சொன்னாள். தன் அன்னைக்கு எப்போதாவது கஷ்டகாலம் சம்பவிக்கும்போது தன்னை நினைத்தால் தான்வந்து உதவிபுரிந்து போவதாகச் சொன்னதாகவும் சொன்னாள். தன் புத்திரனை நோக்கிப் "பீஷ்மா, நீ விரும்பும் பக்ஷத்தில் வியாசரைக்குறித்துத் தியானிக்கிறேன்: அவர் உடனே வருவார்" என்று சொல்லி அவரை நினைத்ததும் உடனே வந்து தோன்றினார் வியாசர். அப்போதிருந்த அசந்தர்ப்பத்தை அவருடன் சொல்லவே அதற்கவர் "ஆமாம்! வேண்டுமாயின் புத்திர சந்தானம் உண்டாகும்படி செய்யலாம். அதற்கும் தக்ககாலம் வேண்டாமா? திடீரென்று இப்போதே உண்டாகவேண்டுமென்பது உமது விருப்பமாயின் தம்பியினுடைய பத்தினிகள் என்விகார ரூபத்தைச் சகித்து என்னுடன்கலந்தால்தான் புத்திர சந்தானமுண்டாகும். அவர்கள் இதைச்சகித்து என்னுடன் சேர்வார்களாகில் அதுவே அவர்கள் அகோரதபசு செய்ததற்குச் சமானம்" என்று வேதவியாசர் தன் அன்னையினிடம் சொன்னார். சத்தியவதி தன் மருமக்களை அதிக பிராயசப்பட்டு இந்த இருஷியுடன் சேர இணங்கும்படி செய்தாள். அப்படிச்செய்தும் மூத்தவள் இவருடைய கறுத்த முகத்தையும், தாமிரவர்ணம் போன்ற சடையையும், தீப்பொறிபறக்கும் கண்களையும், வளர்ந்துமார்பினிடம் புரளும் தாடியினையும் கண்டு அவர் தன்னை யணுகினவுடன் சகிக்க முடியாது பயந்து கண்ணை மூடிக்கொண்டனள். தன்னை அநுபவித்துப்போம் வரையில் மூடின கண்களைச் சற்றேனும் திறக்கவேயில்லை. ஆகவே அவளுக்குப் பிள்ளையாய்ப்பிறந்த ஆத்மாவோ தான் முன்செய்த கர்மசேஷத்தினால் கண்ணிலாத் தேகத்தில் இருந்துழலவேண்டி வந்தது. வியாசரும் அவளுக்குப் பிறக்கும்பிள்ளையானது பிறவிக் குருடாயிருக்குமென்று முன்னதாகவே சொன்னார். இப்பிறவிக் குருடன்தான் திருதராஷ்டிரமகாராஜா. அம்பாலிகையோ ருஷியைப்பார்த்ததும் பயந்து தேகம் வெளுத்துப்போய் விட்டாள். அவளிடமாகப் பிறந்தபிள்ளையோ வெண்குட்டம் பிடித்தவனாய்ப் போய்விட்டான். இவன்தான் பஞ்சபாண்டவர்களுடைய தந்தை. இவன்பெயர் பாண்டுமகாராஜா. இவ்விரண்டு பிள்ளைகளும் இப்படிப் பிறப்பார்களெனத் தெரிந்தவுடன் ஒருபழுதுமில்லாத பிள்ளை ஒன்றுவேண்டுமெனச் சத்திய

வதி வேதவியாசரை வேண்டிக்கொண்டு தன் மூத்தமருகியை அழைத்து இருஷியினிடம் மறுபடியும் போகச்சொன்னாள். தன் மாமியாருடைய வார்த்தைக் கிணங்காது தன் வேலைக்காரியாகிய ஒரு சூத்திரஸ்திரீயைத் தனக்குப்பதிலாக அவரிடம் அனுப்புவித்தாள். அவளோ இவர்களைப் போன்று கர்வங்கொள்ளாது இருஷியினுடைய பெருமையை நினைத்துப் பயபக்தியுடனும் அதிக விசுவாசத்துடனும் நடந்து கொண்டாள். வியாசர் அவளை ஆசீர்வதித்து அவளிடம் செல்லவே தருமதேவதையேஒருரு வெடுத்து அவளுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தது. அந்தப் பிள்ளைக்குத்தான் விதுரனென்று பெயர். வேதவியாசருக்கு இத்தருணத்திற் பிறந்தவர்கள் மூவர். மூத்தவன் திருதராஷ்டிரன், இரண்டாவது புத்திரன் பாண்டு, மூன்றாவது புத்திரன் விதுரன். முதலிருவரும் பாரதயுத்தத்து இருதிறத்தார்க்கும் முறையே தந்தையராயினர். விதுரரோ திருதராஷ்டிரனுக்கு மந்திரியாயிருந்தார்.

இம்மூவரையும் இளமைப்பருவத்தில் பீஷ்மர் தன் பிள்ளைகளைப் பாதுகாப்பதுபோற் பாதுகாத்து வந்தார். அம்மூவரும் தங்கள் குலாசாரத்திற்குத் தக்க சடங்குகள்செய்து முடிக்கப்பெற்றவுடன் வித்தியாப்பியாசம்செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் தாம் அறியவேண்டிய வேதத்திலும் பாண்டித்தியமடைந்தார்கள். வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், கதாயுதப்பயிற்சி, கத்திவிளையாட்டு, தர்ம சாஸ்திரம் இவைகளெல்லாவற்றிலும் மிக்க தேர்ச்சியடைந்திருந்தார்கள். சரித்திரம், புராணம், பற்பல கலைகள், வேதம், வேதாங்கம் என்னுமிவற்றிலும் அதிக விற்பத்தி உடையவர்களானார்கள். அக்காலத்திற் புத்திரர்களின் தேகப் பயிற்சியில் தாய் தந்தையர் எவ்வளவு கவனம் வைத்திருந்தார்களோ அவ்வளவுகவனம் அவர்கள் புத்திரர்க்குவேண்டிய மதஞானம் குணஞானம் என்னு மிவைகளினும் பூர்த்தியாய் வைத்திருந்தார்கள்.*

இவர்களில் மூத்தவன் பிறவிக்குருடனாய்ப் போய்விட்டபடியால் அவன்றன் இளையோனாகிய பாண்டுவுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார் பீஷ்மர். திருதராஷ்டிரனுக்குச் சுவல தேசாதிபதியின் புத்திரியாகிய சாந்தாரியைப் பாரியையாக்கினர். "கொ

* ஆதிபருவம் [§ 109]

ல்லேக்குக்கள்ளி, குடிக்குச்சகுனி" என்னும் பேர் பெற்ற குடி கேடனுகிய சகுனியின் சகோதரி இவள். இவளோ மகா பதிவிர தை. கல்யாணமாவதற்கு முன்னமே தனக்கு வாய்க்கும் புருஷன் கண்ணிலானெனக் கேள்வியுற்றதும் மிகப்பரிதபித்துப் பற்பல பொருள்களையும் பார்த்து அநுபவிக்கத் தனக்குவரும் நாயகனுக் குக் கண்ணில்லாதபோது தனக்கு மாத்திரம் கண்ணிருக்கலாகு மோவென்று தன் கண்ணையும் வஸ்திரங்கொண்டு கட்டிவிட்டதாக ஒருகதையுமுண்டு *. ஸ்திரீகள் 'தங்கணுயகரிற்றெய்வம் தவம் பிறி தில' வென்றெண்ணி அவர்களிடத்து வைத்திருக்கும் பயம் பக்தி விசுவாசம் என்னு மிவற்றில் இந்து ஸ்திரீகளுக்கு நிகராக வேறு ஸ்திரீகளை ஒப்பிட்டுச்சொல்லுதல் கூடாது.

யாதவர்களுக்கரசனுகிய சூரசேனவர்மன் மகள் பிருதா (குந்தி) என்பவளைப் பாண்டு பத்தினியாககினுர் பீஷ்மர். இவள் ஸ்ரீ கிருஷ் பகவானுடைய தந்தையாகிய வசுதேவருடைய சகோதரி. இவளு டைய ஸ்வயம்வரத்திற் பீஷ்மருடைய விருப்பத்திற் கிணங்க இவள் பாண்டுவிற்கு மாலையிட்டாள். கொஞ்சக் காலத்திற்குப் பிறகு மத்ர தேசாதிபதியாகிய சல்லியனுடைய சகோதரி மாத் திரி என்பவளையும் இவருக்கு மனைவியாக்கினுர். இரண்டாவது மனைவி வந்த ஒரு மாதத்திற்குள் அநேக ராஜ்யங்களைச் செயித்து மிகுந்த திரவியங்களை அஸ்தினபுரத்திற்குக் கொண்டு வந்தார். பாண்டு மகாராஜா தன்னிரண்டு பத்தினிகளையும் தன்னுடன் கொ ண்டு வேட்டையாடும் விருப்பத்துடன் காட்டிற்குச்சென்று அவ் விடத்திலேயே கொஞ்சக்காலம் வாசஞ்செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் இவர் வேட்டையாடும் பொருட்டு வெளியிற் சென் றதும் அவ்விடத்தில் மானுருக்கொண்டு இன்பம் நுகர்ந்து கொண்டிருந்த இருஷி இருஷி பத்னியின்பேரில் தன் மதிமயக்கத் தால் ஓர் அம்பு எய்தார். அருளிலராயிருந்தபடியால் இருஷியின் சாபத்திற் காளாகவேண்டி வந்தது. "உன்மனைவியுடன் இன் பம் நுகர வெண்ணிச் சேர்வாயாயின் இறக்கக்கடவாய்" என்று சொல்லி இருஷியும் அவர் பத்தினியும் பாண்டு மகாராஜா எய்த பாணத்தின் கொடுமைபொறுக்க முடியாது உயிர் துறந்தார்கள்.

* ஆதிபருவம் [§ 100] † ஆதிபருவம். [§ 111 - 114.]

இருஷியின் சாபத்தைக் கேட்டதுமுதல் சுகமற்று ஏக்கமுற்றிருந்தான் அரசனும். இன்பமனுவிக்க முடியாமற் போயிற்றே என்னு மெண்ணத்தினலுண்டான துக்கமன்று; புத்திர சந்தானமில்லாது சாகவேண்டுமே என்னும் வருத்தந்தான். இவ்வருத்தம் நாளுக்கு நாள் அதிகரிக்கவும் தன்னுடைய பொருளையெல்லாம் தானஞ் செய்துவிட்டு வனசஞ்சாரம் செய்யும்பொருட்டுப் புறப்படவே குந்தி, மாத்திரி, என்னு மிரண்டு மனைவியரும் அவனுடன் சென்றூர்கள். *

பாண்டுவிற்குப் பிள்ளையில்லா ஏக்கமே பெரிய ஏக்கமாயிருந்தது. இதற்கென் செய்யலாமெனக் குந்தியினுடன் ஆலோசிக்கவே அவள் தன் புருஷனைப்பார்த்து "நான் கன்னிகையா யிருந்தபோது தூர்வாசமகருஷிக்குப் பணிவிடை செய்யும்படி என் தாய் தந்தையர் என்னை நியமித்தார்கள். அவருக்கு நான் அப்படியே தொண்டு செய்துகொண்டு வருநாளில் அவர் என்பணிவிடைக்கு மிகவும் சந்தோஷப்பட்டு எனக்கு ஒரு மந்திரம் உபதேசித்துப் போயினர். அந்த மந்திரத்தை எந்தத் தேவதையைக்குறித்து உச்சரிக்கிறேமோ அந்தத்தேவதை பிரசன்னமாய் நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றும். வேண்டுமானல் அவர்களாற் புத்திரசந்தானம் பெற்றுப் புத் என்னும் நரகத்தினின்றும் தப்பித்துக்கொள்ளலாம்" என்ருள். இதைக்கேட்டதும் அரசன் மிகவும் மகிழ்ந்து 'அப்படியானல் தர்மதேவதையைவரவழைத்து அவரிடமாக ஒரு புத்திரனைப் பெறுவாயாக" என்ருன். அப்படி அறக்கடவுளுக்குப் பெற்றபிள்ளைதான் தர்மர். யுதிஷ்டிரர் என்பது அவர்க்கு மறுபெயர். அதற்குப்பிறகு பர்த்தாவினது வேண்டுகோளுக்கிணங்கி வாயுவினிடமாகப் பீமனைப்பயந்தாள். பின்பு தேவேந்திரனை நினைத்தமாத்திரத்தில் அவன் வரவும் அவனிடமாக அர்ச்சுனனை யீன்ருள். தன் கணவனுடைய விருப்பத்தின்படி அந்தமந்திரத்தைத் தன் சககளத்தியாகிய மாத்திரிக்கும் உபதேசிக்க அவள் அசுவினி தேவதைகளுக்கு நகுலசகாதேவரென்னு மிரட்டையரையீன்ருள். இவர்கள் தாம் பஞ்சபாண்டவர்கள்; தேவதைகளுக்குப் பிறந்தவர்கள். இவர்களும் தேவர்கள் தாம். இதைக்குறித்து முகவுரையிலேயே முன்னம் கூறப்பட்டுளது. இவர்களில் நால்வர் முன் இந்திரா

* ஆதிபருவம் [§118—119]

யிருந்தவர்கள். அர்ச்சுனன் ஒருவன்தான் நரன் என்னும் ருஷியாயிருந்துஇப்போது இப்பெயர்வகித்து இந்திரனுக்குப்பிள்ளையாய்ப்பிறந்தவன். பாண்டு மகாராஜா தனக்கு நேர்ந்தசாபத்தைமறந்து ஒருநாள் மாத்திரியொடுங்கூடி முயங்கமுயன்றான். அவள் என்னசொல்லித்தடுத்தும் கேட்கவேயில்லை. அவளிடம் இன்பம் நுகர எண்ணங்கொண்டு அவளைத் தொட்ட மாத்திரத்திலேயே இவன் பிராணன் போய்விட்டது. மாத்திரியின் மடியின்பேரில் அவன் உயிர்விட்டதும் இவள் தேம்பித்தேம்பி அழுங்குரலைக்கேட்டுக் குந்தி ஓடிவந்து பார்க்க, தன் கணவன் இறந்து கிடப்பதையுங் கண்ணுற்று இவளும் அவளுடன்சேர்ந்து அழ ஆரம்பித்துவிட்டாள். இவர்களிருவரும் தாம் தாம் தங்கணவருடன் போகவேண்டு மென்னும் விவாதம் உண்டாயிற்று. கடையில் ஒருவாறான முடிவும் ஏற்பட்டது. மாத்திரியின் மடியில் உயிர்விட்டபடியால் தானே அவருடன் போகவேண்டியது நியாயமென்றும் அதற்குக் குந்தி யிணங்க வேண்டுமென்றும் மாத்திரி வேண்டிக்கொள்ளவே குந்தியும் அரைமனத்துடன் சம்மதித்தாள். உடனே தன்னிரண்டு பிள்ளையையும் குந்தியினிடம் ஒப்பித்துத் தானுந் தன் கணவனுடன் போய்விட்டாள். குந்தி நகுல சகாதேவர்களையும் தன் புத்திரர்களைப்போலவே அதிகக்கவலையுடன் பாதுகாத்து வளர்த்துக்கொண்டு வந்தாள். உடனே சில ருஷிகள் குந்தியினிடம் போய் அவளையும் ஐவரையும் அஸ்தினாபுரிக்குக் கொண்டேகிப் பீஷ்ம திருதராஷ்டிரர்களிடத்து ஒப்பித்துச் சென்றார்கள். பாண்டுவிற்குரிய ஈமக்கிரியைகளும் சிராத்த சடங்குகளும் தகுதியாய் நிறைவேற்றப்பட்டன. *

திருதராஷ்டிர மகாராஜாவுக்கும் காந்தாரியினிடமாக நூறு புத்திரரும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். இவர்களில் மூத்தோனாகிய துரியோதனன் பீமன் என்றைத்தினம் பிறந்தானோ அன்றைத் தினத்திலேயே அவனும் அவனிமிசைத் தோன்றினான். ஆயினும் துரியோதனன் பிறந்தபோது துர்க்குறிகள் பற்பல காணப்பட்டன. காற்றும் மழையுங்கலந்துவீசின. நாயும் நரியும் ஊளையிட்டலறின. காகமும் கழுதையும் கரைந்துகத்தின. இத்தகைய துர்க்குறிகள் அநேகம் நிகழ்ந்தன. நல்ல காலத்திற் கேற்கப் பிரபஞ்சமும் அதி

* ஆதிபருவம் § 120-127.

னுள்ள வஸ்துக்களும் ஆனந்தமடைந்து அலங்காரமாய்த் தோன்றும். காலம் கெடுதியாயிருந்தால் அதற்குத்தக்க கெட்ட குறிகளையும் தோற்றுவிக்கும். இக்குழந்தையாலே குலம் நாசமாகப் போகவேண்டியிருக்கிறதன்றோ? அதற்குத்தக்கபடி மிசிர பதார்த்தங்களும்கூட ஏக்கமுற்றிருந்தன. அவனுடைய ஜாதகத்தை விதுரர் பார்த்து உலகத்திற்கு நாசம் வருமென்றெண்ணி இவனையெறிந்துவிடுவதே உத்தமமென்று திருதராஷ்டிரனுக்குப் புத்தி சொன்னர். அவனுக்குத் தன் மூதற்புத்திரனை எறிந்து விடுவதற்குச் சிறிதேனும் மனம் வரவேயில்லை. தன்னுடைய நாசத்திற்கும் தன் தேச மழிவதற்கும் துரியோதனன் காரணனுயினுன். இதற்கெல்லாம் காரணம் தகப்பனுடைய அறிவீனமே யன்றி வேறில்லை. புத்திரவாச்சல்லியத்தை மாத்திரம் பார்த்தானே தவிர தானெரு அரசனென்பதையும் தன் குடிகளுடைய க்ஷேமத்திற்குக் கடமைப்பட்டிருக்கின்று னென்பதையும் முழுதும் மறந்தான் போலும். *

நன்னெறி விட்டுத் துன்மார்க்கத்திற் பிரவேசித்த உலகிற்கு நன்னெறியைக் காட்டும்பொருட்டு எண்ணங்கொண்ட தேவர்களுடைய தொழிலுக்கு உதவியாகும்பொருட்டுப் பிறந்தான் துரியோதனன். முன் ஜன்மாந்தரத்தில் தான் செய்த செயலுக்குத் தக்கபடியும் தன் னெண்ணங்களுக்குத் தக்கவாறும் இத்தகையவேலைக்குரியனுய் இவன் இத்தருணத்திற் பிறக்கவேண்டி வந்தது. இவன் மிக்க பலமுடையவன். அதிகதைரியசாலி. கடவுளிடத்தும் சிறிது பக்தியுள்ளவன். அரசனுக்குரிய கடமைகளில் பெரும்பான்மையும் தான் அநுஷ்டித்துக்கொண்டும் வந்தான். ஆயினும் தன்னயத்தையே கருதுபவன்.

“நானே எல்லாவற்றிற்கும் முதன்மையாக வேண்டும். நானே அரசனுகவேண்டும். நான் எண்ணியவாறு எல்லாமியங்க வேண்டும்” என்னுமித்தகையனவே அவனுடைய எண்ணங்கள். தன்னைப்பார்க்கினும் வேருெருவன் ஏதேனுமொரு காரியத்தை நன்ருய்ச்செய்தால் மனம்பொருன்.

“அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்”

---

* ஆதிபருவம். [§ 115.]

என்பதைச் சிறிதேனும் ஓரான். பொறாமை மேற்கொண்டெழவே மனசு நிம்மதி யென்பதே அவனுக்குத் தெரியாதாயிற்று. அழுக்காறுதான் அவனுக்கு அந்தத்தில் அந்தகனாய்வந்து தோன்றியது. துரியோதனனைப் பார்க்கினும் யுதிஷ்டிரர் வயதினால் முதிர்ந்தவரானதனால் இவர்தாம் நியாயப்படி அரசு செய்வதற்குரியவர்.

பாண்டவர்களும் துரியோதனாதியரும் ஒரேயிடத்தில் வளர்ந்துகொண்டு வந்தார்கள். பீமன அதிகபலவான். காளையர் குறும்பு அதிகமுடையவன். விளையாடும்போதே அவனுடைய துஷ்டத்தனம்முன்னிற்கும். மற்றெல்லோரையும் மூக்கைப்பிடித்து ஆட்டுவான். அனேகம்பேரை ஒரேகாலத்தில் ஜலத்தில் அழுத்தி மூச்சுத்திணரும்படி செய்துவிடுவான். மற்றவர்களெல்லாம் ஆற்றங்கரையிலுள்ள மரத்திலேறிப் பழம் பறிக்கும்போது இவன் கீழிருந்துகொண்டு சண்டமாருதம்போல் மரத்தை அலைக்க எத்தனித்த மாத்திரத்தில்மரத்திலுள்ள பழங்களும் அதைப்பறிப்பவர்களும் பொத்துப்பொத்தென்று கீழேவிழுவார்கள். இவன் பலமோ அவ்வளவு சிறந்தது. கெட்ட எண்ணத்துடன் இவன் இப்படிச் செய்யாமற்போன போதிலும் இந்த முரட்டாட்டம் மற்றவர்களுக்குப் பிடிக்கவேயில்லை. பலமுள்ள பிள்ளைகள் யோசனை செய்யாது தங்கள் பலத்தை உபயோகிப்பதனால் எல்லாருடைய விரோதத்தையும் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். பீமனுடைய பலத்தைப் பார்க்கப் பார்க்கப் துரியோதனனுக்கு அழுக்காறு அதிகரித்துக் கொண்டேவந்தது. அவனைக் கொன்றுவிடவும தீர்மானித்துவிட்டான். தன்னெண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டுக் கங்காநதிதீரததில் ஒரு வசந்த மாளிகை சமைப்பித்துப் பாண்டவர்களை விருந்துண்ண வரும்படி கோரினான். விருந்து நடக்குந்தினத்தில அந்தரங்கமான சிநேகிதனைப்போன்று நடித்து விஷங்கலந்த அன்னத்தைப் பீமனுக்குத் தன் கையாலேயே கொடுக்கத் துணிந்தான். போஜனமானபிறகு ஜலக்கிரீடை ஆடும்பொருட்டுக்கங்கையிலிறங்கினார்கள். ஆடியபிறகு எல்லாரும் கரையேறிவிட்டார்கள். பீமனும் கரை ஏறினான். அதற்குள் விஷம் தலைக்கேறிவிட்டது. மயக்கங்கண்டு மண்மேறபடுத் துறங்கிவிட்டான். மற்றவர்கள் இதைக் கவனிக்கவில்லை. துரியோதனன் மாத்திரம் பின்தங்கி பீமன்விஷத்தினால் தன் உணர்ச்சியற்றிருக்கும்போது ஆற்றங்கரையில் படர்ந்

திருக்கும் கொடிகள்கொண்டு கட்டிப் பீமனைக் கங்கையிலெறிந்து விட்டான். பீமன் கங்கையில் விழுந்ததும் பாதலம்போய் நாக லோகத்தைச்சேர்ந்தான். அங்கிருந்த சர்ப்பங்களெல்லாம் தங்கள் காளி, காளாத்ரி, யமன், யமதூதி, என்னும் தங்கள் விஷப்பற்களாற் கடிக்கவே தன்தலைக்சேறி யிருந்தவிஷமானது மாறிப்போய்விட வும் தனக்கு உணர்ச்சியும் சற்றுதித்தது. உணர்ச்சி வந்ததும் தன்னைப் பிணித்திருந்த கொடிகளையறுத்துச் சர்ப்பங்களைக் கொன்று குவிக்கவும் ஆரம்பித்தான். சர்ப்பங்கள் தங்களரசனாகிய வாசுகியினிடம்போய்த் தங்களைக் காக்கும்படி முறையிட்டன. அங்கிருந்த உயர்ந்த சர்ப்பங்களிலொன்று பீமனுடைய மூதாதையா யிருந்தது. அதனுடைய வேண்டுகோளுக்கிணங்கி வாசுகி பீமனுக்கு அமிர்தகுடத்தினின்றும் கொஞ்சமமிர்தம் குடிக்கும்படி செய்தான். குடித்ததும் பலம் அதிக விர்த்தியாய் விட்டது. எட்டு நாள் கழித்து தன்னூருக்குத்திரும்பினான். நடந்தவற்றைத் தன்னன்னை, தமயன், தமபியர்க்கும் ஆதியோடந்தமாய்ச் சொன்னான். விதுரர், யுதிஷ்டிரர் இவர்கள் இதனை வெளிக்குத் தெரியாமலே அடக்கிவிட்டார்கள். இவ்வளவு பக்ஷமாயிருந்தும் துரியோதனன்மாத்திரம் தன் கெட்ட எண்ணத்தை யொழிக்க முயலவில்லை. பாண்டவர்களிடத்துத் தான் வகித்த விரோதமும் கிருஷ்ண பக்ஷத்து இருளைப்போல் நாடோறும் விருத்தி யடைந்து கொண்டே வந்தது.

(இன்னும் வரும்)

சல்குளம் - குப்புசாமிமுதலியார்.

---

## சீவகசிந்தாமணி.

---

இந்நூலினைப்பற்றி ஆராய்வான் புகுந்த யாம் இந்நூலாசிரியராகிய திருத்தக்க தேவர்காலத்து நாகரிகத்தைப்பற்றியே முதற்கண் நோக்குவாம்.

**ஆசிரியர்காலம்:**—சீவகன் சரித்திரங் கூறப்பட்டுள்ள இக்காலம் பௌத்தமதம் பலராலும் பாற்றப்பட்டொழிந்து இந்துமதம் முந்திய நிலையை முற்றும் பெறுது நடுவே இருதிறத்தார் கொள்கையுள்ளுஞ் சிலவற்றைத் தமவெனக்கொண்டு தமக்கெனப் பிறிதொரு மதமொன்றைப் புனைந்து கொண்டு அவ்விருதிறத்தாரினும் வேருயினராய்ச் சைனரெனப் பெயர்பூண்ட மத

த்தினர் மிக்கிருந்த காலமே யாமென்றற்குப் பல நியாயங்களுள்ளன. இக் காப்பியமே சைன நூலாமென்பது எல்லாவற்றினுஞ் சிறந்த நியாயமாம். இதுசீவ கடைச்சங்கத்தார் காலமெனபதும் விளங்கும். யாங்ஙனமெனின் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'இத்தொடர் நிலைச்செய்யுள் * தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமு மாதலானும்' என்றெழுதியதனானும் அவை தாமே கடைச்சங்கத்தார்க்கு இலக்கணமென்பது இறையனாரப்பொருளுக்கு நக்கீரரெழுதிய வுரையானும் தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தாலும் பிறவாற்றானும் அறியப் படுதலானுமென்க.

**இந்தியாவின் நாடுகள் :**—நமது இந்துதேசயமானது இக்காலத்திற் பற்பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுபோலும். அவற்றுளெல்லாம் ஏமாங்கதமென்னு நாடானது "இசையாற்றிசைபோயது" எனக்கூறப்பட்டுள்ளமையின் மற்றையவற்றினுஞ் சிறப்புற்றிருந்த தென்பதற் கையமில்லை. இத்துணைச் சிறப்பினதாய இந்நாட்டின் தலைநகர் இராசமாபுரமாம். அது கடற்கரையிலிருந்ததென நகர வருணனையில் விளங்கக் கூறப்பட்டுள்ளது. இதுதான் அக்காலத்திற் செல்வம், கல்வி, குணமுதலியவற்று ளெல்லாந் தலைமை பெற்றிருந்தது. இந்நாட்டைக் குருகுலத் தரசர்கள்சில ராண்டு வந்தனரென்பது தெரிகிறது. அவரிற் றலையாயினார் சச்சந்தனென்பானும் அவன் மகன் சீவகனென்பானுமே. இவருள்ளும் சீவகன் கொடையானும் கல்வியானும் முறை செய்தலானும் மிக்கு விளங்கினானென்பது இந்நூலின் பெயராலேயே கொள்ளக் கிடக்கின்றது. இதுவேயன்றித் தக்க நாடு, பல்லவதேசயம், மத்திமதேசயம், விதேகநாடு, தாதகிநாடு முதலிய தேயங்களும் கேமமாபுரம், ஏமமாபுரம், பூமிமாதிலகம், வாரணவாசி முதலிய நகரங்களும் இக்காலத்திற் பிரசித்தி பெற்றிருந்தன வென்பதுந் தோற்றுகிறது.

**சாதி :**—நால்வகைச் சாதிபேதங்களும் இக்காலத்தேயும் இருந்துள்ளன. அன்றியும ஒவ்வொருவரையும் இவர் நால்வகைச் சாதியில் இச்சாதியினரென வரையறுத்துச் சுட்டுதல் இயலாதாதலின் இவ்வருணக் கலப்பாற் பிறந்த அனுலோமப் பிரதிலோமர்களும் * சங்கரசாதியினரும் அக்காலத் தேயும் இருந்துளர். இஃது இராசமாபுரத்துக் கடைத்தெரு வருணனையிற்

"பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்தம் மகலம் பூசி
மாசன மிடம்பெறாது வண்கடை மலிந்த தன்றே"

எனத்தேவர் கூறுமாற்றானும் "நான்கு சாதியும் அனுலோமப் பிரதிலோமருஞ் சங்கரசாதியும் பற்றி "எழுவர்" என்றார்' என உரையாசிரியர் கூறுமாற்றானும் அறியப்படும்.

---

* தேவரென்றது இந்நூலாசிரியராகிய திருத்தக்க தேவரை.

* சங்கரம்—கலப்பு.

**பாஷை** :—இக்காலத்துச் சிங்கள முதலாய பதினெண் பாஷையும் பயில வழங்கின. அதனை "முட்டிலா மூவறு பாடைமாக்கள்" எனத்தேவர் கூறுவதனாலறிக. அன்றியும் 'மிலேச்சராதலின் ஐயறிவிற்குரிய "மாக்கள்" என்னும் பெயராற் கூறினார்' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதினமையின் இலக்கணத்திருத்த மில்லாத சொற்களைச் சொல்லுவோராகிய மிலேச்சர் எனப்பெயர் பெற்றார் சிலர் இருந்தன ரென்பதூஉம் விளங்கும்.

**உணவு** :—அரிசி, நெய், தயிர் இவைகள் இவரது உணவிற்கு உபயோகிக்கப்பட்டன. சறி, துவை முதலிய உணவின் பேதங்களுமிருந்தன. பெரும்பாலார் வெற்றிலை யுபயோகித்தனர்.

**ஆலயவணக்க முதலியன** :—இக்காலத்திற் சினாலயங்கள் பற்பலவிருந்திருத்தல் வேண்டும். "திங்கள் முக்குடை யான்திரு மாநகர், எங்கு மெங்கு மிடந்தொறு முண்மையால்" எனக் கூறப்பட்டுளது. இங்ஙனம் கவி தமது மதாபிமானத்தாற் புனைந்திருத்தலுங்கூடும். திருவிழாக்களும் நித்தியநைமித்திய கருமங்களாகிய * யாக முதலியனவும் தேவருடைய பலியும் நடந்துவந்தன. அரசர் முதலாகப் பல்லாயிரவர் ஒருங்குகூடி இப்பலிகளைச் சேவித்தனர். இக்காலங்களிற் சங்கம், முழவு, முரசு முதலிய இசைக்கருவிகள் முழக்கப்பட்டன. இவ்வாலயங்களில் இருபாலாருந் தொழுது வந்தனரென்பது இடைநகரிடம் 'மாலையும் பூணு மயங்கப்பட்டுச் சிலைபோலு நுதலினாரோடே யாடவரும் கலக்கப்பட்டுத் தேவரிருப்பிடமிது வென்றையந்தரும்' என்றதனாற் போதருமென்க.

> "குன்றிற்
> கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்
> போர்த்ததன் அகலா"

எனத் தேவர் கூறுதலிற் கார்த்திகைத் திருநாளிற்குன்றின் மேல் விளக்கிட்டு வந்தனரென்பது விளக்கமாம். இதனாற் திருவண்ணாமலைத் தீபத்தையே குறிப்பிட்டனரென்பதும் ஊகிக்கப்படுகிறது. அஃதக்காலத் தேயும் அத்துணைச் சிறப்பினதா யிருந்திருத்தல் வேண்டும்.

இச்சைனர்கள் அருகனையுஞ் சித்தனையுஞ் சாதுக்களையுந் தன்மத்தையும் வணங்கி வந்தார்கள். இஃது இவருக்கு முக்கிய நமஸ்காரமாகிய பஞ்சநமஸ்காரம் என்பது அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்குதற்குரியனவாகிய ஐந்து மந்திரங்களாதலின் நன்கு விளங்கும்.

**மதக்கோள்கைகள்** :—இவர் மதவிஷயமாகிய சில கொள்கைகள் மற்றைய மதக்கொள்கைகளே போன்று பிறமதத்தாராற் கொள்ளப்படாதொழிவனவேயாம். ஒரு மனிதனாதல் பிராணியாதல் இறக்குந்தருணத்திற் பஞ்சநமஸ்கார மந்திரத்தைச் செவியில் ஓதினால் உடனே அவ்வுபதேச

* பூசையை யாகமென்பர் சைனர்.

த்தால் அவ்வுயிர் தன்னுடம்பை யொழித்துத் தேவனாகி விண்ணிற் செல்லுமென நம்பியிருந்தனர். இன்னும் இம்மந்திரம் வழித்துணையாகுமவென‌க் கூறப்படுவதுமுண்டு.

> "ஆருயிர்க் கிழத்தி தன்னை
> யின்பமிக் குடைய சீர்த்தி யிறைவன தாணை கூறித்
> துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன்"

எனத் தேவர் கூறியதற்கு "அவனாணை 'ஓம் ணமோ அரஹந்தாணம்' என்னுமொழி" என நச்சினார்க்கினியர் உரையெழுதினமையான் இஃது ணரப்படும். உயிர்நீங்கும்பொழுது தியானம் வந்துதவினால் வீடுபேறும் என்பது இவர்கொள்கை. வானவர் கால் நிலத்திற்றோயா வென்றும் அவர் நோக்காலே நுகர்வரென்றும், மனிதருபமாய் உலகில்வந்து தம்மையொழிய வேறுகதியில்லாத தமதன்பருக்கருள்புரிவரென்றும், அவர்வினையுலந்தாற் றமது நிலையினின்றும் விழுந்துவிடுவரென்றும், அவருக்குயிர்போகப் பதினைந்து நாள்களுளவெனக் கண்ணுமிமைக்கு மென்றும், செல்வமுண்டாதற்குப் பலிநடத்தல் வேண்டுமென்றும் நம்பியிருந்தனர். காவன்மகளிர் அரசற்கு வெற்றிநிலைபெறும்படி யேத்துவதற்காகவே சில ஸ்ரீகோயில்கள் ஏற்படுத்தப்பட்டன. கனாக்கண்டால் அது பலித்தேவிடுமென நினைத்திருந்தார்கள். கடையாமத்திற் கனாக்கண்டால் அதுகடிதிற்பயக்குமெனவும் நம்பினர். கனவுக்கு முற்பட்டுத்தோன்றுதபொருளே யில்லை என் இவர் கொள்கை. இதனைக்,

> "கல்லாதான் கண்ட கழிநுட்பங் கற்றார்முற்
> சொல்லுங்காற் சோர்வு படுதலால்—நல்லாய்
> வினாமுந் துறாத வுரையில்லை யில்லை
> கனாமுந் துறாத வினை"

என்னும் பழமொழியாலுணர்க. அன்றியும் சீவகன் சரிதமுழுவதுங் கனவின் பயனாகவே கூறப்பட்டிருத்தலுங்காண்க. காந்தருவதத்தை யாரிலம்பகக் கதையால் இவர் சோதிடத்திலும் மந்திரவித்தையிலும் நம்பிக்கை வைத்திருந்தார்க ளென்பது மறியப்படும். தம்பால் வந்து மீளும் பெரியோர்களுடன எழடியளவு சென்று வருவோர் ஸப்தபயத்தினின்று நீங்கி ஸப்த பரமஸ்தானத்தைப் பெறுவரென்பது இவரது நூற்கொள்கை. உயிர்கள் எண்ணிறந்த பிறவிகளிற் றோன்றுவன என்பதும் ஒரு பிறவிக்கு முன்னர் இத்துணைப்பிறவி யெடுத்தோ மென்பது கணக்கிடற்கரிதென்பதும், இப்பிறவிகடோறும் வெவ்வேறு உறவினரை யுடையோமாதலின் ஓர் பிறவியிலுள்ள உறவினருக்காக இரங்கல் அறிவின்மையா மென்பதும், சாதலும் பிறத்தலும் ஆகலும் அழிதலும் எல்லாம் தம் வினைகளின் பயத்தான் விளைவன வென்பதும், ஆண்டுச்சாதற்கும் அழிதற்கும் நோதலும் பிறத்தற்கு மாதற்கும் இன்புறுதலும் எல்லாம் அறிவிலாரது செயல்களாம் என்பதும், அவ்

வினையுறுதல் பொருட்கு இயல்பாமென்பதூம் இவரது கொள்கைகள். இவற்றையெல்லாம்

"சாதலும் பிறத்தறானுந் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளியென்றான்."

"தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா
எல்லைய வவற்று ளெல்லா மேதிலர் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிக டம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா"

எனச்சச்சந்தன் கூற்றாகத் தேவர்கூறுதலானுணர்க. இதனாற்றான பமாவது உள்ளத்தோர் கோட்பாடே யன்றிப்பிறிதில்லை யென்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்கு மென்பதூஉம் இதனை யறிவதே யறிவென்பதூஉம் கையில் வெண்ணெயிருக்க நெய்க்கழுவாரிலராதலின் தம்முள்ளத்துப் பிறிதுபட வுள்ளல் வழியானே யிடர்ப்பாட்டினை நீக்க முயலாது வருந்துவார் அறிவிலரென்பதூஉம், இங்ஙனம் இன்பதுன்பங்கள் மனக்கோளே யன்றி வேறல்லவாதலின் அவைகளைப் பொருட்படுத்தாது ஒருவுதலே நன்றென்பதூஉம் இவர்கள் நன்குணர்ந்தார்களென்பது பெற்றாம்.

**மணம்** :—பெருந்திணைப் பாற்பட்ட இராக்கத மணமும் இக்காலத்தில் மணமெனவே கொள்ளப்பட்டிருந்ததென்பது தெரிகிறது.

**கூத்து** :—இக்காலத்திலே நாடகசாலைகள் பற்பல விருந்தன வாகல் வேண்டும். அவற்றிலே மகளிர்பெரும்பாலும் நடித்துவந்தனர். இது "கொலைத்தலைய வேற்கணார் கூத்து" என்றதனானும் "காமர் வல்லி மாதரார் கூத்தருத பள்ளியும்" என்றதனானு முணரப்படும்.

**இராகம்** :—இராகஞானம் பெரிதும் பயன்படுத்தப் பட்டதென்பது புலப்படுகின்றது. இது விசயை மயிற்பொறியைப் பையப்பைய மேன்மேற் றூர்ந்து விசையுடனோடும்படி முறுக்கவு முணர்ந்தாளென்புழிப் பிறிதோருவமமெடாது இசைப்பாட்டு ஒரு ஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானத்திற்கு மெல்லச்செல்லுதலை உவமமெடுத் துரைத்ததனாலறியப்படும். அன்றியும் காந்தருவதத்தை பாடுதலிலும் யாழ்வசித்தலிலும் மிக்கு விளங்கினதாக் கூறப்பட்டமையும் அவளை இசையில் வென்ற சீவகனை 'வீணைக்கிழவன்' எனப்பதிகத்தும் 'பண்ணினுக்கரசன்' எனச்சுரமஞ்சரியாரிலம்பகத்தும் 'யாழாசிரியன்' எனக்கத்திய சிந்தாமணியிலும் புகழ்ந்திருத்தலும் காண்க. இன்னும் இதனை ஆமந்திரிகையினிலக்கணத்தானும், "ஒழிந்த கருவிகளோடு கூடு மழலையுஞ் சுவையையுமுடைய நரம்பையுடைய யாழ்"

என்றதனுனு மறிக. இக்காலத்துச் சனங்களெல்லாம் ஆடல் பாடல்களின் மிக மகிழ்ந்தனர் போலும்.

**ஆட்டுக்கடாச்சண்டை கோழிச்சண்டை முதலியன** :—இக்காலத்திலே நமது தேயத்திலேயும் சிற்றறிவினராகிய சிலமனிதர்கள் ஆட்டுக்கிடாய்களை யும் கோழிகளையுங் குறும்பூழ்ப்பறவை முதலிய சேவல்களையும் போர்க்கொளுத்திக் களிப்படைந்தார்களென்பதறிகிறேம். இது

"கோட்டி னந்த கர்களுங் கொய்ம்ம லர தோன்றிபோற்
சூட்டு டைய சேவலுந் தோணிக் கோழி யாதியா
வேட்டவற்ற தூறுள்ளார் வெருளிமாந்தர் போர்க்கொளீஇக்
காட்டி யார்க்குங் கௌவையுங் கடியுங் கௌவை கௌவையே."

என்றதனுனும்,

"பூத்தலை வாரணப் போர்த்தொழி விளைபவர்
*நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயில"

என்றதனுனும் உணரப்படும். ஆயினும் இஃது அக்காலத்தேயும் நன்மக்களால் வெறுக்கப்பட்டதென்பதும் இன்னணம் அவற்றினது புண்ணைக் கருதாராய்ப் பின்னும் போரை விரும்பி ஆரவாரஞ் செய்வோர் செல்வச் செருக்கினையுடைய மாந்தரேயா மென்பதுந் தோன்ற அவரை "வெருளி மாந்தர்" எனத் தேவரிழித்துரைத்தமையா னறிக.

**உழவு** :—ஓடு நீரானது பரந்துவழங்கும்படி நீர் வரத்தறிந்து கற்படுத்திய வாய்க்காலின் தலைப்புக்கள் ஆங்காங்கிருந்தன. தண்ணீரைக் கோட்டகத்தே நிறைப்பதற்காக வாய்த்தலையிடந்தொறும் நாட்டிலுள்ளார் படலிடுவது வழக்கம். உழவர்கள் எருமைக்கடாக்களையும் எருதுகளையுங்கொண்டு நிலத்தை யுழுதார்கள். அங்ஙனம் உழுவார் நிலமகளையும் இந்திரனையுந் தொழுது முளையை விளைகவென்று வித்துவார். இம்மள்ளர்கள் மது வுண்பது வழக்கம். விளைவு முற்றினபின்பு நெல்லையரிந்து சூட்டைச் சுமந்து சென்று போரிடுவார்கள். பின்பு கடாவிட்டு நெல்லைப் பொலி செய்வார்கள்.

**வாணிகம்** :—இக்காலத்தே கருப்பாலைகள் இருந்தன. நெல்லையும், கரும்பின் பாகையும், மலரையும், இளநீரையும், வெற்றிலையையும், பழுக்காய்களையும், பழங்களையும், ஓர்க்கோலை, சங்கம், பவளம், முத்து, உப்புமுதலிய கடல்படு பொருள்களையும், அவரை துவரை முதலிய புன்செய்த் தானியங்களையும் வண்டிகளிற்கொண்டுபோய்இடந்தோறும் விற்றுவந்தனரென்பது தெரிகின்றது. பெரிய தனவந்தர்களாகிய வணிகர்களுக்கு அவ்வவர் தரத்திற்கேற்ப அரசராற் பட்டப்பெயர்களும் பொற்பூ முதலிய பணிகளுங் கொடுக்கப்பட்டன. இதனைப்,

* நாத்தலை மடிவிளி—நாவின்றலையை மடித்துச்செய்யும் ஒலி.

"பட்டமும் பசும்பொற் பூணும் பரந்தொளி நிழற்றுந் தீந்தேன்
அட்டுந்தா ரலங்கன் மார்ப ராவணங் கிளக்க லுற்றேன்"

என்றதனுனும் 'எட்டி காவிதிப் பட்டந்தாங்கி' எனப் பெருங்கதையி னும் 'எட்டிப் பூப்பெற் றிருமுப்பதிற்றியாண், டொட்டிய செல்வத் துயர்ந் தோ ஞயினன்' என மணிமேகலயினும் இவ்வாறே கூறப்பட்டிருத்தலானு மறிக. சுரங்கங்களைவெட்டிப் பொன்முதலிய உலோகங்களைக் கொண்டுவந் தார்களென்பதுந் தெரிகிறது.

**இராசாங்கம்:**—இக்காலத்துச் சனங்கள் அரசனிடத்தே அதிக மரியா தை பாராட்டி வந்தார்கள். அரசனும் குடிகளை மிக்க அன்புடன் பாதுகாத் துவந்தான். யோக்கியதையும் கல்வியுமுள்ள அமைச்சர்களு மிருந்தனர்.

**அரசாதுமேன்மை :**—அரசர்கள் கடவுட்டன்மை யுடையவரெனவும், அவர் தேவரினும் பெரியரெனவும், அவர் உறங்குவாராயினும் அவரொளி யுலகைக் காவாநிற்கு மெனவும், அவராணையைக் கடந்து நடந்தவர் இடும் பை நோய்க்குங் குட்டநோய்க்கும் நரகத்திற்கு மிரையாவாரெனவும் அரசு முறைமை பிறழுமாயின் 'இவ்வுலகு கோள் நிற்கு நிலை குலைந்து இராகாழி கை குறையப் பகற்பொழுதுகள் மிக்கு மாரியின்றாய் நிலம் விளைவு சுருங் கிப் பசிமிக்கு மகளிர் கற்பழிந்து அறச்சாலைகளு மின்றிக்கெடும்' எனவும் எண்ணியிருந்தனர். அரசர்க்கிருந்த அதிகாரமும் மிக அதிகமெனல் தெரிகின் றது. அவரிடம் நெருங்கிக் குற்றங்குறைகளை யெடுத்துரைப்போர் மிகத்துணி ந்தவரா யிருந்திருத்தல்.வேண்டும். 'தம்மை யொருவன் வாழ்த்துவனுயின் அவனை யருளியாக்கலும் தம்மை யொருவன் வைவனுயின் அவனை யருளா தழித்தலும்' அவர்களுக்கு அப்பொழுதே யாகு மெனவும், 'மன்னருடைய கோபம் தீங்குசெய்தவர்களைத் திரண்ட சுற்றத்தோடுஞ் சுடும்; அவரது அருள் அவரை விரும்புவாருண்டாயின் அமுதுபோலுறுதி பயக்கும்; அவ ரது செற்றம் அவரை விரும்பாதார்க்கு நஞ்சுபோற் கரந்து நின்று கொல் லும்' எனவும், 'மன்னவர்களான் வருநவையை யஞ்சுவார். அவர் காய்வன வற்றையுவமை கூறுமிடத்துங் கூருர் நினைப்பதுஞ் செய்யார்' எனவுங் கூறப்பட்டுள்ளது. இங்ஙனமாயினும் இக்காலத்தேயும் அமைச்சர் மாத்தி ரம் நூல் வழக்கறிந்தவராதலின் அரசனிடத்துத் தீயன கண்டால் இடித்துக் கூறிவந்தன ரென்பதறிகிறோம்.

**அரசனறங்கள்:**—அரசரும் மற்றையோரும்பொதுஜன நன்மைகுறித்து யாவர்க்கும் விலக்குதலில்லாத அடிசிற்சாலை முதலியனவும், தண்ணீர்ப் பந்தரும், வித்தியாசாலைகளும் ஏற்படுத்தி அறத்திற்காக இறையிலி நிலங்க ளும் (ஸர்வமாந்யம்) கொடுத்து வந்தனர். முற்காலத்திருந்த குறைகளிற் பல தற்காலத்திலவாயினும் அத்துணை யறஞ்செய்தல் இக்காலத்தில்லை யென்றே சொல்லல்வேண்டும்.

**அரசன் பொழுதுபோக்கும் வகை** :—அரசன் விளையாடுவதற்காக அரண்மனையை யடுத்து ஓர் காவற்சோலையும், அச்சோலையில் அவனுறைவதற்காகப் பள்ளிமாட மண்டப மொன்றும், செய்குன்றுகளும், உத்தியான வனங்களும் இருந்தன. 'கூத்தினரவமும் பாட்டினரவமும் முழவினரவமும் யாழினரவமு மாகிய குறைதலில்லாத ஓசையாலே அரசற்கு நாள்கடோறு நாள் கழியாநின்றது.' நகரத்தருகே கடல் கப்பல் முதலியவற்றைச் சமைப்பித்து விளையாடுதலு மிவர்க்கியல்பு. இவ்வரசருக்கு அகப்பரிவார மகளிராகிய அரசச் சுற்றத்தாருடைய குழாங்களும் (ஐஞ்ஞூற்றுவர்) நிருத்தகீத வாச்சியத்திற்குரிய மகளிரும் காமமொழிந்த நுகர்ச்சி கொடுத்தற்காக இருந்துளர். இன்னும் பலபோகமங்கையரும் (ஐந்நூற்றுவர்) இருந்தனரென்பது புலப்படுகிறது. 'மயிலின் றன்மையார் என்ற பன்மையாற் றேவியர் பலராயிற்று' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவதனால் இஃதறியப்படும். இங்ஙனம் இவ்வரசர்கள் உண்மையில் நல்லரேயாயினும் சிற்றின்பத்தின் மூழ்கிக் காமமென்னும் பெரும்பகைவனைத் துரத்த ஆற்றலற்றவராய்த் துறத்தற்கரிய வேட்கை மிகுதியினாற் றமது அரசியனெறியினின்றும் வழுவித் தாம் வீணே காலங்கழித்துத் தமது பகைவரால் வெல்லப்பட்டொழிந்ததேயன்றித் தம்மைச் சார்ந்தோர்க்குந் தமது குடிகளுக்கும் பெரியதோரிடர்ப்பாட்டை விளைவித்தனர். இவரெல்லாம் ஊழ்க்கோளே பெரிதெனக்கொண்டு தமதறிவினைப் பயன் படுத்தாது வாணாள் வீணாள் போக்கினர். ஐயகோ! இவருக்கு இவ்வறிவு ஒன்று மாத்திரம் இருந்திருக்குமாயின் நமது தேயம் எத்துணைச் சிறப்புற்றிருக்கும். அங்ஙனமாயின்,

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்"

எனவும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

எனவும் நீதிநூலார் வாளாது கூறினாராலோவெனின், அற்றன்று அவர் இவ்வாறுரைத்தது பேரவாவினை யறுத்தல் வேண்டுமெனவற்புறுத்துதற்கேயாமென்க. அன்றியும் இத்தகைய கடா வெழுப்புவோர் அவர்தாமே

"அறிவினாற்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்" எனவும்

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்" எனவுங் கூறுவதனை யறியாரென விடுக்க.

**போர்க்கருவிகள் முதலியன:**—அரசனுக்கு யானை முதலிய நால்வகைச் சேனைகளுமிருந்தன. படைவீரர் பழகுவதற்காகத் தேரேறு மிடங்களும் குதிரையேறு மிடங்களும் வாட்டொழில் செய்யு மிடங்களும் விற்றொழில் செய்யு மிடங்களும் இருந்தன. வில்லும் வேலும் வாளுமே இவரது முக்கிய ஆயுதங்கள். குந்தம், சக்கிரம் முதலிய ஆயுதங்களுமிருந்தன. தமது மெய் வாள் முதலிய படைகளால் ஊறுபடாமலிருத்தற்குக் கேடக மென்னு மெய்காப்புக்கருவியும் உபயோகித்தனர். இக்கருவி கரடித்தோலாற் செய்யப்பட்ட தென்பது தெரிகிறது. புலித்தோலாற்செய்த கவசத்தை வீரர்களணிந்து கொள்வது வழக்கம். வாகனங்களிலேறாத வீரர்கள் கவசம் பூணுதல் மரபன்று. விளையாட்டுக்களுள்ளே யானைச்செண்டு குதிரைச்செண்டு என இரண்டு வகை யுண்டு. இவையாடும் முற்ற வெளியைச்செண்டு வெளி யென்ப. யானைப்போர் அக்காலத்து மிக்கிருந்தது போலும். யானைகள் நெருங்கி வந்து போர் செய்யாமலிருத்தற்கு இரும்பால் யானை நெருஞ்சி முள்ளாகப்பண்ணிய கப்பண மென்னுங் கருவிகளைச் சிதறுவார்கள். யானை மருப்பை யறுத்துக் கூர்மையிட்டு அது வலிகொள்ளும்படி கிம்புரி யென்னும் பூணிடுவார்கள். நகரின் மதிலைச்சார யானைக்கூடங்கள் இருந்தன. மதிலுக்கு உள்ளேயும் புறத்தேயும் ஆழமான அகழிகளிருந்தன. புறத்தேயுள்ள அகழியினின்றும் கோயிலகழிக்கு நீர் வருதற்காகக் கால்வாய்கள் செய்யப்பட்டிருந்தன. வீதியிற்செல்லும் யானைகள் தன்னுள் வீழா திருத்தற்பொருட்டு இது மேலே மூடப்பட்டிருக்கும். இக்கரந்த கற்படை கரந்து படையெனவும் கரந்துறை யெனவும் வழங்கும். இம்மதிலிலே பலவகைப்பொறிகளிருந்தன வென்பதும் அவை யவனரால் இயந்திரிக்கப்பட்டன வென்பதுங் கூறப்பட்டுள. யுத்தத்திற்குச்செல்வோர் பலவகைமாலை சூடிக்கொள்வது வழக்க மென்பதறிகிறோம். இதனை

"வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்" என்ற கலிவெண்பாவானு முணர்க.

படைகளுக்கஞ்சிக் கண்ணிமைத்தல் தோல்விக் குறியென்பதூஉம் சுத்த வீரர்கள் அங்ஙனம் இமையாரென்பதூஉம் இவர் கொள்கை. இதனை

"விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு" என்னுந் திருக்குறளானுமறிக.

போர்க்களத்தின் முகநோக்கி வீழ்தல் வீரக்குறிப்பெனவும் அங்ஙனம் ஓரரசன் வீழ்வானாயின் அவன் சந்ததியாரேனும் பிற்காலத்திற் பகைவென்று

இராச்சியாதிகாரத்தை மீளவும் பெறுவரெனவும் எண்ணியிருந்தனர். அரசன் தனது மனைவியை முன்னே போக்கிப் பின்னர்த்தான் யுத்தத்துக்குப் போகுதல் முறைமையென்பதூஉ மிவர் கொள்கை.

**பெண்கள் நிலைமை**:—இனி யிக்காலத்தே பெண்களுக்கிருந்த உரிமையையும் அவர் நிலைமையையுஞ் சிறிது கவனிப்பாம். இப்பொழுது தொம்பரச்சிகள் என வழங்கும் பெயரினையுடைய கழைக்கூத்தியர் அக்காலத்தே மிக்கிருந்தனர் போலும். அவர் கயிற்றிலே குதித்துக் கலனொலிப்ப ஆடுங் கூத்தைத் தேவர் செவ்வியதோ ரிடத்து உவமைபாக்கூறுகிறார். அது வருமாறு:

"கூடி னார்க ணம்மலர்க் குவளை யங்கு ழியிடை
வாடு வள்ளை மேலெலாம் வாளை யேறிப் பாய்வன
பாடு சால்க யிற்றிற் பாய்ந்து பல்க லனொ லிப்பப்போந்
தாடு கூத்தி யாடல் போன்ற நாரை காண்ப வொத்தவே". இவ்வாறே

"மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றிற்—போநீள்
கழைக்கோ தையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்" எனப் புகழேந்திப்புலவர் கூறுவதுங்காண்க.

பெண்கள் கமுகமரத்திலே கயிற்றை நாலவிட்டு அதைப் பிடித்துக் கொண்டு ஊசலாடுவது வழக்கம். இதனை "ஊசலாடு பைங்கமுகு" என்றதனானும்,

"கோழ ரைம ணிமடற் கூந்த னெற்றி யேந்திய
மாழை யந்தி ரள்கனி மாம ணிம ரகதஞ்
சூழ்கு லைப்ப சுங்க முகு சூழு பாளை வெண்பொனூ
லூழ்தி ரண்ம ணிக்கயி றூச லாட விட்டதே"

என்றதனானு மறிக. மகளிர் பந்தாடுவது வழக்கமென்பதறிகிறோம். பந்தாடுவதற்காகவே சில விடங்களு மிருந்தன. பந்தாடலின் விகற்பங்களும் பலவாறாகக் கூறப்பட்டுள. அவை யார்வமுடையார் பலர்க்கும் விருப்பந்தருவனவேயாமெனத் துணிந்தே மாதவின் ஈண்டுக் கூறுதும்:

"வைத்த பந்தெ டுத்தலு மாலை யுட்க ரத்தலுங்
கைத்த லத்தி னோட்டலுங் கண்ணி நெற்றி தீட்டலும்
பத்தி யிற்பு டைத்தலும் பைய ரவி னாடலும்
இத்தி றத்த பந்தினோ டின்ப மெல்லை யில்லையே."

(இதன்பொருள்):—பந்தைக் கையாற் றொடாதே காலாலே தட்டியெடுத்தலும் கரத்தலும் கையிலே கொள்ளலும் செல்ல வோட்டுதலும் கண்ணியையுடைய நெற்றியிலே தீட்டுதலும் ஒருகாலைக் கொருகாலுயரப் பத்

தியாகப் புடைத்தலும் தாம் நிலையிலே நின்று அரவுபோலப் பந்துலாவுத லுண்டாம்படி புடைத்தலுமாகிய இக்கூற்றவாகிய அப்பந்திஞே டுண்டான வின்பம் முடிவில்லை யென்க'.

இப்படியே விமலையாரிலம்பகத்தில் விமலை பந்தடித்தாளென்னும் பொழுது கூறப்பட்டுளது. அரசனிடத்தே தமக்குரிய துறைகள் முற்றக் கற்று அவையிலே யாடுதலுடைய அரம்பையன்னார் ஐஞ்ஞூற்றுவர் இருந்த தாகக் கூறப்பட்டுள்ளதனுற் சிலபெண்கள் நாட்டியம் பயின்றிருந்தார்க ளென்பது விளங்கும். அன்றியும் கூத்தநூலென்றே ஒரு நூலுண்மையுங் காண்க.

**விலை மகளிர்** :—"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்ட றையி, லேதில் பிணந்தழீஇ யற்று" எனத் தெய்வப் புலவரால் இழித்து ரைக்கப்பட்டவரும் நிதியாகிய தசையைக் கைக்கொண்டு உடலைக் கைவிடு வோருமாகிய வரைவின் மகளிர் இக்காலத்துப் பற்பலரிருந்தனர். இஃது இராசமாபுர வருணனையிற் பரத்தையர் வீதி வருணனையால் அறியப்படும்.

**பெண் கல்வி** :—இனி யாம் அவசியம் கூறவேண்டுவதோர் விடய முளது. அஃது இக்காலத்திற் பெண்கல்வி நிராகரிக்சப் படாமற் பராமரிக் கப்பட்ட தென்பதே. இதனைத் தன்னைப் பிரிய வருந்திய விசயையைத் தேற்றுவான் புக்க சச்சந்தன் கூற்றுச,

"வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனுல் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்று லொழிகநின் கவலை யென்றான்"

எனத்தேவர் கூறுவதனு லறிக. இதனுற் சிலபெண்களேனும் நூலாராய்ச் சியிற் பெரிதும் வல்லவராயும் கல்வியின் மிகத்தேர்ந்தவராயும் பேரறிவு டையராயு மிருந்தார்களென்பது பெற்றாம். பெண்கள் கல்வி கற்கவேண் டிய தவசியமோ என்பதைக் குறித்துத் தற்காலத்துத் தார்க்கிகர்கள் ஆங் காங்கு முழங்கக் கேட்ட யாம் சிலர் அது நமது தேயத்தின் நன்னிலை மைக்கு இன்றியமையா தென்பதைத் தெற்றென வறிந்தும் நம்முன்னோர் கள் இதனை யாதரித்து வந்தார்க ளென்பதை யறியோமே இதுகாறும் வழக் காறுகாததொன்றை நாமெவ்வாறு நன்றெனக்கூறுவது என்றிங்ஙனம் பல வாறு ஆலோசித்து மாழ்குகின்றார்க ளென்பதை யறிந்துளேம். தாம் நன் றெனவறிந்ததை யுறுதிப்படுத்தற்கு ஏதேனும் வழியுளதோவென ஆவலுடன் தேடாநிற்குமவர்க்கு இஃதோர் மேற்கோளாகுக. சிலமகளிர் சங்கீதமும் நன்குணர்ந்திருந்தார்க ளென்பதறிகிறோம். இங்ஙனம் அவர் நிலைமை பலவி தத்திலும் மேம்பட்டிருந்த தென்பது நன்குவிளங்கும்.

பெண்கள் * கடிப்பிணை, குழை, மகரம், வளை, ஆழி, மேகலை, கிண்கிணி, குறங்குசெறி, சிலம்பு, பாடகம் முதலிய அணிகளை அணிந்திருந்தார்கள். அவர் அக்காலத்திலணிந்திருந்த அணிகளிற்பலஇப்பொழுது வழங்குவதில்லை போலும்.

**சிற்பத் தொழில்** :—இனியக்காலத்துச் சிற்பத்தொழில் முதலியவற்றைச் சிறிது கவனிப்பாம்: இவை பெரும்பாலும் இத்தேயத்தின ரல்லாதவரும் யவன முதலிய மேற்றேசங்களிலிருந்து வந்தவரும் யவனரெனப் பெயர் பெற்றோருமாகிய கிரேக்கர் முதலியோரது தொழிலேயா மென்பதும் நமது தேயத்தார் அவைகளை நன்றாக அறிந்தில ரென்பதும் விளங்குகின்றன. இவ்யவனத் தச்சரே அக்காலத்துக் கம்மியத்தொழி லெல்லாஞ் செய்து வந்தனர் போலும். இவர் வேலையிற்சிறந்தவரென்பதை இராசமாபுரத்து அகநகர் மதிலிலே நூற்றுவரைக்கொல்லி, தூக்கி யெறிபொறி, துவக்கு சங்கிலி, விட்டேறு, பேய், பெரும்பாம்பு, கோண்மா, விற்பொறி, விடுகுதிரை, தொடர்வாள், கற்பொறி, பாவை, அன்னம், மாடம், கொள்ளி, கொக்கு, கூகை, ஐயவித்துலாம், இருப்புப் பன்றி, நாகம், விடுசகடம், குரங்கு, தகர், அரிகயிறு இவைகளும், எவ்விடத்துந் திரிந்து செம்புருகினநீரையுமிழ்வனவும், பகைவர் வேதற்குக் காரணமான உருகுவட்டை யுமிழ்வனவும், நெய்யை யுமிழ்வனவுமாகிய யவனர்இயந்திரித்த விசித்திரப்பொறிகள் பல அமைந்திருந்தனவாகக் கூறப்பட்டிருத்தலானும் கண்டத்தெருவருணனையிற் "பொன்யவனப்பேழை"யைச் சிறப்பித்துக் கூறுவதனானு முணர்க. அன்றியும் இவ்வாறே பெருங்கதையிலும், மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும், திருவிளையாடற் புராணத்திலுங் கூறப்பட்டுளது.

"தம்புலங்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே'' எனத்தேவர் கூறுமாறுபோல, "அமரரணைலா, மறிவினுனிறுவு கம்மி யன்செயவுமரிய வாயவனர் புரியுமிப், பொறிகள் செய்யும்வினை யின்ன' எனப்பரஞ்சோதி முனிவருங் கூறுதல் காண்க.

**கப்பல் யாத்திரை** :—இக்காலத்திற் சிலர் கப்பல் யாத்திரைசெய்து வந்தார்களென்பதும் விளங்குகிறது. இராசமாபுரம் கடற்றுறை முகமெனக் கத்திய சிந்தாமணியிற் கூறப்பட்டுளது. புகாரினது ஆழத்தால் நகரளவுங் கலம் வந்த தென்றார் நச்சினார்க்கினியரும்.

இங்ஙனம் 'திருத்தகுதேவர் காலத்து நாகரிகம்' ஒருவாறு கூறப்பட்டது. இன்னும் சைனரது மதக்கொள்கைகளும் அக்காலத்துச் சனங்களது விருப்பு வெறுப்புகளைப்பற்றினவுமான பல்வேறு வகையினவாய நுண்ணிய விஷயங்கள் அநேக முள்ளன. அவையெல்லாம் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. 'சீவகசிந்தாமணி யாசிரியர் காலத்து நாகரிகம்' எனத் தலைப்பிட்டுக்

* கடிப்பிணை—குதம்பை போல்வதோர் பணி.

கொண்டு சச்சந்தனது நாட்டுவளம் நகர்வளம் முதலாக அவன் சரிதத்தினின்றும் விஷயங்களை யெடுத்துரைத்தது எதனாலோ வெனின் நூல்கள் பலவற்றினும் அவ்வவ்வாசிரியரது காலத்து நாகரிகமே விளங்கக் கிடக்குமென்னும் பெருநியதி பற்றி யென்க.

நூல்நலங் காண்போன்.

---

## ருக்மணி சரித்திரம்.

---

### அத்தியாயம் 3.

என்ன அநியாயம்! என்ன அநியாயம்! மூன்று பெண்களை வைத்துக் கொண்டு யோக்கியதையாய்க் காலங்கழிப்பது அசாத்தியம். எவ்வளவு ஆயிரங்கள் உளவேனும், சௌக்கியமாய் இருக்க முடியாது. அப்படியிருக்க, ஸ்வல்ப ஆஸ்தி இருப்பவர்களுக்குள்ள கஷ்டங்களைப்பற்றி நினைக்கும் பொழுதே, மிக்க மனவருத்த முண்டாகிறது. ஆடு மாடுகளை ஏலம் போடுவது போல, பெண்களையும், பிள்ளைகளையும், நமது பெரியோர் ஏலம் போடுகிறார்கள். தங்கள் பெண்பிள்ளைகள் மணம் என்பது இன்னதென்று அறிய முடியாமலிருக்கும் பொழுதே கலியாணஞ்செய்து வைத்துவிடுகிறார்கள். பின்னர், தாங்கள் மணம் புரிவித்தவர்கள் சுகமாய்க் கூடிவாழ்ந்திருப்பார்களா வென்பது நமது பெரியோர்களுக்குச் சிறிதேனுங் கவலையில்லை. அதுநிற்க, ஸ்வல்ப ஆஸ்தியுடன் பெண்களை வைத்துக்கொண்டிருப்பவன் கஷ்டங்களைப்பற்றி சற்று யோசிப்போம். மாப்பிள்ளை தேடுவதே மிகக் கடஷ்டம். படிப்பிருந்தால் சொத்து இல்லை. பணமிருந்தால் படிப்பில்லை. இவ்விரண்டு மிருந்தாலோ, மாப்பிள்ளையது விலை அதிகமாய் விடுகிறது. அது மாத்திரமல்ல. பெண்ணைக்கொடுப்பதாக வருபவன் மனம் மிகநொந்து போகும்படி செய்து விடுகிறார்கள். நல்ல வழக்கம்! நல்ல வழக்கம்!! பிள்ளை வைத்திருப்பவன் ஏழையாயிருப்பானாகில், அவனுக்கும் இதே விதத் தொந்திரவு தான். அவனுக்கு ஜீவனத்துக்குள்ளவை யெல்லாம் விற்றுவிட்டு எல்லாவற்றையும், பெண்ணின் தகப்பனிடத்தில் கொடுத்துவிட்டு, இரண்டு பேராய் பிச்சைக்குப் போகவேண்டியதுதான். கலியாண மென்பது நமக்குள் இவ்வளவு கஷ்டமான வியாபாரமாயிருக்கிறது.

ஐயாசாமி ஐயர் மறுநாள் ஜாதகம் கொடுப்பேனென்று சொல்லியும், அவர் சொன்னபடி நடக்கவில்லை. ஏனெனில் அவர் பிள்ளையின் தகப்பன். தான் சற்று மேலாயிருந்து பேச வேண்டும் என்பது அவர் கொள்கை. அவர் கொள்கை மாத்திரமல்ல. அவருடையஸ்தானத்திலிருக்கும் எல்லாரது கொள்கையும் அதுதான். பிறகு மூன்று நாளைக்கு ஒவ்வொரு தினத்துக்கு

நான்குநடை வீதம் சுப்பையர் அலேந்தபிற்பாடு, ஜாதகத்தைக் குறித்துக் கொடுத்தார். சுப்பையர் கொண்டுவந்து அநேக ஜோஸ்யர்களிடத்திற் காட்டி ஜாதகங்கள் பொருந்தினவென்பதைப்பற்றி மிகச் சந்தோஷத்துடன் வேங்கட ராமையரிடம் வந்து,

"பார்த்திண்டு வந்துட்டேன் எல்லாஞ் சரியாயிருக்கு" என்று மிக உரத்திச்சொன்னார்.

"சரி. இனிமேல் பணத்தைப்பத்தி பேச வேண்டியதுதானே"

"ஆமாம்"

"எவ்வளவுலே நிற்கும்"

"ஆயிரத்திச் சொச்சத்தில் நிற்கும்"

"அவ்வளவுலேயா"

"அதுக் கென்ன பண்றது"

"முடியாது போல் ருக்கே"

"ஆனுப் பேசவேண்டாமா"

"இல்லே, இல்லே, பேசுங்கோ. எப்படியானுஞ் சரிப்படுத்றது"

"சரி"

"ஆயிரத்திலே நிற்கும்படி பாருங்கோ"

"சரி நான் போய்ட்டுவரேன், நீங்க ஆத்லேயிருங்கோ. யார் ராது பயலே இவாளே கோவிலுக்குள்ளே அழைச்சுண்டு போடா"

வேங்கடராம ஐயர் உடனே புறப்பட்டு ஐயாசாமி ஐயர் வீடுபோய்ச் சேர்ந்தார். போய் வெகு நேரம் பணத்தைப்பற்றித் தகரார் நடந்தது. வேங்கடராம ஐயர் 500 - ரூபாயில் ஆரம்பித்தார். ஐயாசாமி ஐயர் 1500 - ரூபாயில் ஆரம்பித்தார். கடைசிபாக, 1000 - ரூபாய் கொடுத்தாற் சுப்பையரது பெண்ணைத் தனது மகனுக்குக் கலியாணஞ் செய்து கொள்ளுவதற்குச் சம்மதித்தார். வேங்கடராம ஐயருஞ் சம்மதித்தார்.

மேல் நடந்ததைச் சொல்லுவதற்கு மனங் கூசுகிறது. சுப்பையரது சொந்த மைத்துனன் சுப்பையரை மோசஞ்செய்வதற்கு ஆரம்பித்தார். என்னவென்றால், ஆயிரம் ரூபாய், சுப்பையர் ஐயாசாமி ஐயருக்குக் கொடுக்க வேண்டுமென்று பேசியிருந்தாலும், சுப்பையரிடத்தில் ஆயிரத்திருநூறு கொடுக்கிறேனென்று பேசியிருப்பதாகச் சொன்னார். என்னமோசம்! ஏன்? அண்ணன் தம்பியையும், புருஷன் பெண்சாதியையும் மோசஞ் செய்யும்பொழுது இஃது ஓர் அதிசயமா?

வேங்கடராம ஐயருக்கு வேலே யொன்றுமில்லே. உண்பதும், உறங்குவதும், பிறரைப்பற்றி வம்பளப்பதுந்தான் அவர்காரியம். எவ்விஷயமும் தனக்குத் தெரியுமென்பது அவர் கொள்கை. யார் எது சொன்னாலும் அது அவருக்கு லக்ஷியமில்லே. இன்னமும், எல்லாரது பணமும், தன்னிடத்தில்

வந்து குவியவேண்டுமென்பது அவரது ஸ்வப்னம். ஒருவித சம்பாத்யமுமில்லாததனால் இவ்வளவு அநியாயமான ஒரு மோசத்தைச் செய்ய எத்தனித்தார்.

"ஆயிரம் ரூபாய்க்கு எசையமாட்டேன் னுட்டாரோ" என்றார் சுப்பையர்.

"மாட்டேன் னுட்டார்"

"இன்னங்கொஞ்சம் பாருங்கோ"

"என்னாலானமட்டும் பார்த்துட்டேனே"

"இன்னம் ஒருதரமாவது பாருங்கோ"

"ஏது சரிப்படாது"

"நான் வாணாப் போய்ப்பாக்கறேனே"

"ஆனால் பாருங்கோ" என்று சிறிது முகக் கடுப்புடன் வேங்கடராம ஐயர் சொன்னார். இது சொல்லுவதற்குச் சிறிது தயங்கினார். பிறகு அவருக்குத் தைரியமுண்டாயிற்று. வேங்கடராம ஐயருக்கு, சுப்பையர் நேராய்ப் போகும்பக்ஷத்தில் ஐயாசாமி ஐயர் நிஜத்தைச் சொல்ல மாட்டாரென்பது நிச்சயம். அதனாற்றான் இவ்விதமாய், நிஜம் பேசுபவரைப்போலச் சொல்லிவிட்டார்.

"சரி ஆனால் போய்ட்டுவரட்டுமா" என்று சொல்லிச் சிறிது தூரஞ் சென்று, திரும்பிவந்து, அம்மாஞ்சி கிருஷ்ணையரைக் கூப்பிட்டார்.

கிருஷ்ணையர், விலாப்புடைக்கத் தின்றுவிட்டார். ஒட்டுத் திண்ணையில், உத்தரீயத்தை விரித்துப்போட்டு, தூங்கவேண்டுமென்ற எண்ணத்துடன் கண்களை மூடிக்கொண்டார். தூக்கமோ வரவில்லை. வயிறு வெடித்துப்போகும்போ லிருக்கிறது. வயிற்றுவலியும், நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரிக்கிறது. ஆகையினால் மேலுங்கீழுமாகப் புரண்டுகொண்டு, கண்ணைமாத்திரம் திறவாமல், காலை அகற்றிப் படுத்துக்கொண்டார். சுப்பையர் கூப்பிட்டவுடன் சரேலென்று கண்விழித்து, "அத்தான், கொஞ்சம் ஸ்ரமமாருக்கு, போங்கோ, வரேன்" என்று அடித்தொண்டையோடு கத்தினார்.

"தெரிஞ்சம், போகச்சே, இதுதானே. வந்திருரா கடக்கறது" என்று சுப்பையர் கோபத்துடன் சொல்வதைக்கேட்டு, நடு நடுங்கி, மெல்ல மெல்ல ஆடிக்கொண்டு வந்தார்.

இவ்விருவரும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டே, ஐயாசாமி ஐயர் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். போனவுடன், வெளியிலிருந்த மாப்பிள்ளைப் பையனைக் கூப்பிட்டு "அப்பா இருக்காராப்பா" என்று கேட்டார்.

"இருக்கார், கூப்படட்டமா" என்றான் அந்தப்பையன்.

"கூப்டு, அப்பா"

உடனே பையன் உள்ளே ஓடி, தகப்பனரை நோக்கி, "அப்பா, ஆரோ வந்த்ருக்காள். கூப்டராதா"

"யார்ராது" என்ருர்.

"யாரோ, ரெண்டுபேர் வந்திருக்கா"

ஐயாசாமி ஐயர் எழுந்து ஜன்னலாலெட்டிப் பார்த்து சுப்பையர் வந்திருக்கிருரென்பதை அறிந்து "அப்பா உள்ளே இல்லேனு சொல்லிட்டு" என்ருர். பையன் உடனே வெளியிலோடி, "அப்பா, உள்ளே இல்யாம்" என்று சொல்லிவிட்டு, மறுகேள்வி கேட்பதற்கு முன், உள்ளே ஓடிப்போய் விட்டான்.

சுப்பையர் மறுநாளும் திருவையாற்றில் இருந்தார். சாயங்காலம், வேகடராம ஐயர் வெளியிலிருந்து வந்து "என்னலே ஆனமட்டும் பார்த்தேன். ஐயாசாமி ஐயர், பையனுக்கு இந்த வருஷங் கலியாணம் பண்றதில்லேன்னுட்டார்" என்ருர்.

"நாங்க ஊருக்குப் போய்ட்டு வரலாமா"

"சரி."

இவ்விருவரும் திருவையாற்றை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

---

## மானவிஜயம்.

சேரநாட்டின் தலைநகராகிய **கருவூரின்கணிருந்து சேரமான் கணைக்காலிரும்பொறை** யென்னும் ஓரரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் நல்லிசைப் புலவராகிய **பொய்கையாரிடத்து** அறிவுநூல் பல ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவன்; பொருட்செல்வமே யன்றிச் செவிச்செல்வமுமுடையான். இத்தகைய அறிவுநசையுற்ற அண்ணல் தனது நாடு காவலைப் பெரிதுங் கருதானுயினன். அறிவின் மீதுள்ள அவன்றன்பேரவாப் பிறிதொன்றனையும் பற்றி யெண்ணுதற் கிடந்தரவில்லை. அவன் தனது நாடு முழுதும் நன்னிலையிலிருக்கின்றதெனவும், தன்போலவே பிறரும் நல்லியல்புடையாரெனவும் நம்பி யொழுகினன். அவன் அவ்வாறு ஒழுகுதல் பிறநாட்டுவேந்தரைத் தன்மீது வஞ்சிசூடி மேற்சென்று சேருமாறு தூண்டிற்று.

சேரநாட்டின் நிலைமை இவ்வாருகச், சோணுட்டின்கண் **உறந்தையம்பதியிலோ, சோழன்செங்கணுன்** உலகநூல் முற்றக்கற்றுப் பலதுறைப் பயிற்சியு முடையனுயிருந்தான். அவன் இத்துணையோடமையாது அறிவுநூலும் நல்லாசிரியனை யடுத்து வழிபட்டுணர்தர விழைந்தனன். அவ்வா

றே தான்கொண்ட விழைவு கைகூடுதல் கருதிய கோச்செங்கட் சோழன், பொருட் செல்வத்தை யொருபொருளென மதியாப் புலவர் பொய்கையாரை வேண்டினான். அப்புலவர் பிரான் செங்கணான் அறிவுநூலுணர்ச்சிக்கு இன்னும் அருகனல்ல னென்றுன்னி அவனது வேண்டுகோட் கிணங்கினா ரல்லர்.

ஈதிங்ஙனமிருப்ப, ஏதோ ஒரு காரணம்பற்றிச் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் வழக்குண்டாய் ஒருவரோடொருவர் போர் செய்யும்படி நேரிட்டது. அங்ஙனமே போரும் கழுமலமென்னும் ஊரின்கண் நடந்தது. அதன்கட் சோழனே வாகைமிலைந்தனன். அஃதேயுமன்றிச் சேரமானும் அவன்றன் ஆசிரியராகிய பொய்கையாரும் சோழனாற் சிறைகொள்ளப்பட்டனர். அவ்வாறு போரிற் பிடியுண்ட அவ்விருவரும் சிறைக்கோட்டத் திடப்பட்டனர்.

அதன் பின்னர்ச்சோழன் மறுநாட் காலைப் பொய்கையாரை யழைத்துத் தன் வல்லமை தோன்றப் “பொய்கையாடாப் பொய்கையாரே! இப்பொழுது நீவிர் நந்தம் பேராற்றல் கண்டிரன்றே. மேலும் நீவிர் நமது கைச்சிறையாயினீர்; யாம் நினைத்தபடி யெல்லாம் நும்மையாட்டவும் வல்லேம்” என்று கூறினன். அஃதுளத்துட்கொண்ட அருந்தமிழ் வாணர் சோழனை ஏறட்டுப் பார்த்து, “அண்ணலே! அறியாது கூறினாய், நீ யென்னைச் சிறைப்படுத்தவும் வல்லையோ? யானே யென்னைச் சிறைப்படுத்தினேனே யன்றி வேறெவரும் அங்ஙனஞ் செய்தாரல்லர், செய்யவும் வல்லரல்லர்” என்று ஆழ்கருத்தோடும் பேசினார். அங்ஙனம் அவர் பேசியத னுட்கருத்தினை உய்த்துணராத செங்கணான், “நீவிர் நமது சிறைப்பட்டதும் பொய்யோ? ‘பொய் கையார்’ என்று நுமக்கிட்ட பெயர் சாலும்!” என்று கூறிப் புன்னகை செய்தனன். அது கண்ட பொய்கையார் சிறிதும் அஞ்சாது, “ஓ! புல்லறிவாள! நின்பேதைமை நன்றாயிருந்தது! இத்துணை உய்த்துணரும் மதுகையிலாத நீயும் என்னை யடுத்து அறிவுநூல் கற்றலெங்ஙன மியையும்? நீ யெனது யாக்கை மட்டிலே சிறைப்பற்றினையே யன்றி, எனது இன்னுயிரையுஞ் சிறைக்கொண்டனையோ? அஃது எனது பழவினைகாரணமாகத் தனது பரந்தநிலையி னீங்கிச் சுரிந்து சுருங்கி அணுவாகி இவ்யாக்கையின்கண்ணே வதிகின்றது கண்டாய். பேதை நீ பெரிதும் பொல்லாய்! வேறுபட நினைத்ததென்?” என்றலும், சோழன் சிறிது புன்முறுவல் செய்து அவரைமீட்டுஞ் சிறைக்கோட்டத்திற்கேக விடுத்து, அவர்க்கு வேண்டியதொன்று முதவாது ஆண்டு அவர்தஞ் செயல்களை யாராய்வான் விரும்பினன்.

விரும்பியாங்கே அற்றை ஞான்றிரவில் அரசனுஞ் சிறைக்கோட்டத்தினருகர்ச் சென்று உற்றுநோக்கினான். அவ்வளவில் இறைவனைப்பாடி நின்ற புலவர் நிலமகளை நோக்கி, “உலகமாதாவே! இதுகாறும் நின்னிற் பிரிந்தே

படுத்துறங்குமாறு நேரிட்டது; அப்பொழுதெல்லாம் பெரிதுந் துன்புற்றேன். இப்பொழுதோ யான் உன்றன் அருமைத்திருமடியிலேயே படுத்துக் கொள்ளும் பெரும்பேறு பெற்றேன். இனி யெனக்கென்னே குறை?" என்று சொல்லிக் களிகூர்ந்தார். இவையனைத்தையுங் கண்ணுற்ற சோழன் அவரது இன்பவுளங்கண்டு மகிழ்பூத்து, மற்றைநாள் வைகறைக் காலத்திலேயே பொய்கையாரிடஞ் சென்று அவரை வலம் வந்து வணங்கிச் சிறைவீடு செய்து துதித்தனன்.

இவ்வாறு சோழன் செங்கணன் நெறிப்பட்டமை தேர்ந்த பொய்கையார் அவன்மீது **களவழி நாற்பது** என்னுமொரு செந்தமிழ்நூல் பாடித் தம் மாணுக்கருட் டலைநின்றவனாகிய சேரமான் கணைக்காலிரும்பொறையைச் சிறைவீடு கொண்டு பேராவலோடுந் தமது மாணவனைச்சிறைக்கோட்டத்திற் கண்டு இந்நற்செய்தியை அவற்குரைத்து அரசன் முன்னர்ச் சேரமானையுங் கொண்டு சென்று இருபெரு வேந்தரையும் நட்பாளராக்கி அவ்விருவர்தங் குறையையும் ஒருங்கே நீக்குங் கருத்தினராய் வருகின்றார்.

இது நிற்க. சிறைக்கோட்டத்தின்க ணிருக்குஞ் சேரமான் கணைக்காலிரும்பொறை, தனது ஆசிரியர் பொய்கையாரைப்போல மனவமைதியும் இன்பமுங் காணுதுச் சிறைக்களமுற்ற நாண்முதல் உணவுகோட லொழிந்திருந்தான்; தான் இவ்வாறு போரிற்றெலைவுண்டு காவலிலிருத்தலையே பற்றி யெண்ணி யெண்ணிப் பெரிது மேக்கமுற்றயர்வானுயினன். அவன் தான் இந்நிலையிலிருந்து வருந்துவதனினும் உயிர்துறத்த லுயர்வாமன்றே வென்று மெண்ணினன். இன்னணந் துன்புற்று அரிதிற் பொழுது போக்கும் சேரமான் தண்ணீர்வேட்கைமீதூரப், பொறுக்கலாற்றுது சிறைக்கோட்டங் காவலரைவிளித்துத், தான்றன் ஏவலரைப் பணிக்குமாறு போலப் பருகுநீர் கொணர்மினெனப் பணித்தனன். அவ்வாறு பணிப்பக்கேட்ட காவலர் உடனே செல்லாராய்ச் சிறிது காலந்தாழ்த்துச் சென்று நெடுநேரங் கழித்த பின்னர்க் கொஞ்சந் தண்ணீர் கொண்டு போந்தனர்.

இடையில் இவ்வாறு சிறைகாவலருள் ஒருவனுந் தனது பணியை அத்துணைக் கவனியாது சென்றமையைக் கவனித்து நின்ற சேரமான் தான் அவர்கட்கு ஆணையிட்டமைபற்றிப் பெரிதும் மனமுளைந்தான். பின்னர் அவர்களுளொருவன் தான்கொண்டுபோந்த தண்ணீரைச் சேரமான் பருகுமாறு மிக்க வக்கழுத்தத்தோடும் நின்று ஒருகையால் நீட்டினன். நீட்டியவளவிற் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கு மனந்துணுக்கெனச் சுருங்கலும் முகமும் வெள்ளென விளர்த்தது. அரசனுங் காவலன் நீட்டிய நீர்க்கலத்தைக்கைக் கொண்டானல்லன். உடனே கோட்டங்காவலன் வெகுண்டு வரம்புகடந்து மன்னவனை நோக்கி, "உமக்குத் தண்ணீர் வேண்டுமோ வேண்டாமோ? இவ்வாறு பொய்க்காயினும் என்னைத்தண்ணீர் கொணரும்படியேவினீரென்

பது முன்னரே யுணர்ந்திருப்பேனேல் இதன்கண் யான் தலையிட்டிருக்கவே மாட்டேன். நும்மியல்பு நன்றாயிருந்தது! உமக்கேதேனுஞ் சிறிது சித்தப்பிரமையு முண்டோ?" என்றுசொல்லி நகையாடினன். அதற்கும் வாளாதிருந்தனன் சேரமான். அதன்மேல் அக்காவலன் அரசனை நோக்கி, "நீர் அருந்தினு லருந்துமின், அருந்தாக்கால் வருந்துமின். எனக்கென்னை?" என்றுரைத்து அந்நீர்க்கலத்தைச் சேரமானருகிலேயே வைத்தகன்றனன்.

அங்ஙனம் அவன் அகன்றவளவிற் சேரமான் சிந்திப்பான்: "இவ்வாறு போரின்கட் டொலைவுற்றும், விழுப்புண்பட்டிறந்து வீரசுவரக்க மெய்தாது உயிர் கொண்டு நின்றும், பகைவன் கைப்பட்டுச் சிறைக்களத்திருந்தும், ஆண்டுப்பலரானும் எள்ளி நகையாடப்பெற்றும், உயிர் வாழ்ந்திருப்பதனினும் அதனையின்னே துறத்தல் மேதக்கதன்றோ? இருப்புத்தொடரிற் பிணிப்புண்ட ஞமலிபோல, ஈண்டு வாழ்வதனால் யாது பயன்? மானமேயுயிரினும் மாண்புடைத்தாகுமால்" என்று அந்நீரினைப் பருகாமலேயிருந்து உயிர் துறந்தனன். இதனைக்காவலரும் அறிந்திலர். அந்தோ! "மான மிழந்தபின் வாழாமை முன்னினிதே" என்ற புலவர் வாக்கும் பொய்யோ?

பின்னர்ச் சிறிதுபோழ்தினுள் ஆண்டு அகமகிழ்ச்சியோடும் அடைந்த பொய்கையார் அரசன் செங்கணனது முத்திரை பொறித்த திருமுகத்தைக் காட்டிச் சிறைக்கோட்டத்தினுட்புகுந்து சேரமான் கணைக்காலிரும்பொறை கிடந்தவிடஞ் சென்றார்; அவனைக்கண்டார், கலங்கினார், கலுழ்ந்தார், எழுந்தார், விழுந்தார், அறிவழிந்தார், தன்னை மறந்தார்; மீட்டும் அறிவு கூடியெழுந்தனர், சேரமானை யுற்றுநோக்கினர், பற்றித்தூக்கினர், தம்மார்பம் எற்றித்தாக்கினர். அவ்வேளையிலோரேட்டிற் செந்தமிழ்ச் செய்யுளொன்று வரையப்பெற்றுக் கணைக்காலிரும்பொறைக்கு அணித்தாக்கிடந்தது; அதனையெடுத்தார், படித்தார், கைசோரவிடுத்தார். அண்ணல் சேரமானை வாரியணைந்து பெரிதும் வாய்விடுத்தழுதரற்றினர். காரியம் மிஞ்சிப்போயிற்றென் றுணர்ந்த நற்றமிழ்ப்பாவலர் தமது நன்மாணாக்கன் பிரிவினை யாற்றகில்லாதுஆண்டே பொட்டெனத்தரையினில் வீழ்ந்து மாய்ந்தனர்.

அவ்வோதை கேட்ட சிறைகாவலரனைவரும் வெருஉக்கொண்டு சேரமான் வீழ்ந்து கிடக்குமிடஞ் சென்று கண்டனர். உடனே அவர்கள் சிறிதுபோதும் தாமதியாது சோழன் செங்கணன்பாலோடி யுற்றதுரைக்கப் புகுந்தார்கள். அவ்வமயத்தில் இராசமாதேவி அறிவுடைநங்கை யென்னுந் தன் தோழியாற் றேற்றப்பட்டு அரசன்பாற்சென்று தான்கண்ட தீக்கனவுகளனைத்தையும் மொழிந்து மனம்வருந்தி நின்றாள். உடனே சோழனும் காலந்தாழ்த்தலின்றிச் சிறைக்கோட்டஞ் சென்றுசேர்ந்து ஆண்டுப் புலவருமாணக்கரு மொருங்கே யிறந்துகிடப்பக்கண்டு, தேவிகண்ட தீக்கனவின்பயன் பலித்தவாவுணர்ந்துபெரிதும் புலம்பினான். உண்மையுணர்ந்து தன் சிறை

காவலரைத் தெழித்தான், பழித்தான், சிறைக்கோட்டத்தை யழித்தான். பின்னர்த் தான் அறியாது செய்த இப்பாவச் செயல்கட்குங் கழுவாயாகத் தேவகுலம் பலகுயிற்றினான்.

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி.

---

## பேக்கனார் சிற்றுரை.

---

### 50 - ஆவது:—படிப்பு. *

படிப்பு உவப்புக்கும், அலங்காரத்துக்கும், வேலைத்திறமைக்கும் உதவியாம். உவப்புக்காகப் படிப்பவர், கூட்டம் விட்டுப்பிரிந்து தனிமையிற் படிக்க வேண்டியவர்களாவர். படிப்பால் அலங்காரம் கோருகிறவர் சம்பாஷணையிற் பிரகாசிக்கக் கோரவேண்டியவராவர். எடுத்த வேலையைச் சரியாய் ஒழுங்குபடுத்தி ஒப்புற முடித்தல், படிப்பினால் திறமை அடைந்தவர்களால் தான் ஆகக்கூடியது. இயற்கைத்திறமையால் வேலை முடிவு பெறலாம். தனிச்சங்கதிகள் திருத்தமாய் நிதானிக்கவும் படலாம், ஆனாற் பல சங்கதிகளும் யோசனைகளும் சேரும் காரியங்களில் அவற்றைச் சரியாய்க் கவனித்து மொத்தத்தில் முடிவு செய்வதில், படிப்பாளிகளால் நிறை வேறுகிற அவ்வளவு மற்றவர்களால் நிறைவேறாது. ஒருவர் தம்பொழுது முழுதையும் படிப்பிலே போக்குவது, ஓர் விதமான பித்தமாம். எப்பொழுதும் தம்படிப்புப்பேச்சே பேசுகிறவர்களுக்கு டம்பக் குற்றம் சேரும். விவகாரங்களிற் படித்தபடி நடவடிக்கை செய்கிறவர்கள் கற்றறிமூடராவர். படிப்பினால் இயற்கை மேம்பா டடையும், படிப்பே அனுபவத்தினால் மேம்பாடடையும். எப்படியென்றால், இயற்கையால் வளரும் செடிகளைக் கத்திரித்துவிட வேண்டுவதுபோல், இயற்கைத்திறமையும் படிப்பினால் ஒழுங்குபட வேண்டும். படிப்பையே முழுதும் பிடித்துப்போனாற் புத்தி உண்மையினின்றும் ஒதுங்கலாம், அவ்வாறு ஒதுங்காதிருக்க அனுபோகத்தை அனுசரிக்க வேண்டும். சூதர் படிப்பால் என்ன பிரயோசனமென்று அவமதித்துப் பேசுவர். கபடந் தெரியாதார் படிப்பைப்பார்த்துப் பிரமிப்பர். நற்புத்திமான்களுக்கே படிப்பை உபயோகத்திற்குக் கொண்டுவரத் தெரியும். படிப்பின் பிரயோசனம் படிப்பினாலேயே தெரியாது. படிப்பைப் பிரயோசனமாக்கிக்கொள்ளும் திறமை படிப்பிற்கு அப்புறப்பட்டது, உயர்ந்தது, வெளிநோக்கத்தாலேயே கிடைப்பது.

எதிரியை வாதத்தில் வெல்லவேண்டுமென்ற ஒரே கருத்துவைத்தும், வாசிப்பதை முழுதிலும்நம்பி ஒப்புக்கொள்ளுகிறதென்றும், மற்றையருடன்

---

* Bacon's Essays—On Studies,

கலக்கும்போது பேச்சுக்கிடைக்கவேண்டுமென்ற ஒரே கருத்துக்கொண்டும் வாசிக்கலாகாது. வாசிப்பதைச் சீர்தூக்கியோசனை செய்து தம் அறிவை ஒழுங்குபடுத்தும்பொருட்டு வாசிக்கவேண்டும்.

உதட்டால் தடவி உருசிமாத்திரம் பார்க்கும்படியான உணவையொத்த புத்தகங்களும் சில உண்டு, மெல்லாது சும்மாவிழுங்கமாத்திரம் வேண்டிய உணவையொத்த புத்தகங்களும் உண்டு, நன்றாய்மென்று உட்கொண்டு ஜீரணமாகி இரத்தத்திற் சலக்கவேண்டிய உணவை பொத்த புத்தகங்களும் உண்டு, அதாவது, அங்கங்கே பார்த்துப் போட்டுவிடவேண்டிய புத்தகங்கள் சில, முழுதும் வாசித்துக் கவனிக்காமல் விடவேண்டிய புத்தகங்கள் சில, சஷ்டப்பட்டு முழுவதும் வாசித்துக் கிரமத்துடன் கவனித்துச் சிந்தையில்ஆழ்த்தி அறிவிற்கலக்கும்படி செய்யவேண்டிய புத்தகங்கள் சில, குமாஸ்தாவைத்துப்படிக்கவேண்டியபுத்தகங்கள் சில, குமாஸ்தாக்கள் அவற்றைப்படித்து அவற்றிற் சில சந்தர்ப்பங்களைப் பெயர்த்து எடுத்துக்காட்ட, அவற்றை நாம் வாசித்தாற் போதும் என்னும்படியான புத்தங்களுமுள. நமக்காகக் குமாஸ்தாக்கள் படிக்கக்கூடிய புத்தகங்களெல்லாம், கடைத்தரமான புத்தகங்கள், முதல்தர புத்தகங்களைக் குமாஸ்தாக்களைக்கொண்டுபடித்தல், இறக்கப்பட்ட திராவகங்களைக் குடிப்பதுபோல் ரசமற்றிருக்கும். வாசிப்பால், தெரிந்தசங்கதிகள் நிறைவுபெறும்; சம்பாஷணையாற் சுறுசுறுப்பாய் மொழியும் திறமையுண்டாகும், எழுதலாற் கசடற்ற வலியுற்ற அறிவு பெறலாம். ஆகையால் எழுதிப் பழகாதார்க்கு விசேஷ ஞாபகசக்தி இல்லாமற்போகாதது போலச், சம்பாஷித்துப் பழகாதார்க்குச் சமயத்தில் உதவும் அறிவு இல்லாமற்போகாது, அதிகமாய்ப் புத்தகங்களையெடுத்து வாசியாதார்க்கு, விசேஷமாய்ப் படித்திருப்பதுபோலக் காட்டிக்கொள்ளும் பாசாங்குத்திறமை யில்லாமற்போகாது.

சரித்திரப் புத்தகங்களை வாசிப்பதனால் யுக்தாயுக்தம் தெரியும், செய்யுட் புத்தகங்களை விசேஷமாய் வாசித்திருப்பார்க்குச் சாதுரியமாய்ப் பேசும் திறமையுண்டாம், கணிதநூல் பயின்றார்க்குப் புத்திநுண்ணியதாம், பௌதிக நூற்படிப்புப் பெற்றவர் ஆழ்ந்த அறிவினர் ஆவர், நீதிநெறிநூல் வாசித்தோரிடத்தில், பரந்த நினைவுகள் தோன்றி, அவர்கள் நடக்கை சிறக்கும். தர்க்கவலங்கார நூல்களிற் பயின்றார் சர்ச்சையில் மும்மரிப்பர். "படிப்பு நெறியை அமைக்கும்" என்றது பிரமாணந்தான்.

உடலிற் குற்றம் இருந்தால் அதனைத் தகுந்த உடற்பயிற்சியினாற் போக்கவில்லையா? அப்படியே அறிவில் உள்ள குற்றங்களையும் இசைந்த படிப்பினாற்களைந்துவிடலாம். இடுப்புக்கும் குடல்களுக்கும் பந்தாடுவதனால்வலிமை உண்டாம், சுவாசப்பைக்கும் மார்புக்கும் துப்பாக்கிசுடும் பயிற்சியினாற் குணம் உண்டாம், இரைப்பைக்கு மெதுவான கால் நடையினாற் குணம் உண்டா

ம், குதிரைச்சவாரியினால் மூளைக்குவலியுண்டாகிறது, இன்னும் எத்தனையோ உதாரணம் சொல்லலாம். இப்படியே யாரொருவருடைய புத்தி கலக்கப்பட்டுத்திரிகிறதோ, அவர் கணிதநூல்களைப் படிக்கட்டும்; கணிதநூல் படித்துப் போம்போது கவனம் எம்மட்டுப்பிரியினும், மறுபடியும் அடியைப்பிடித்துச் சொல்லிவந்து ஞாபகம்வைத்தே தீரவேண்டும். நுட்பமான வித்தியாசங்களை உணரத்தெரியாத மந்தர் மத்தியகாலத்துப் பள்ளிக்கூடத்தார் புத்தகங்களைப்படிக்கட்டும். இவர்கள் கடுகில்தொளை செய்தவர்கள் அல்லவா? விரிவானபுத்தி இன்றி ஒருவிஷயத்தை யெடுத்துப் பேசுங்கால் மற்றொரு சங்கதியை ஞெப்தி பண்ணிக்கொண்டு உதசரிக்கத் திறமையில்லாதார், நியாய விசாரணைச் சபைக்குவரும் வழக்குக்களைச் சகலரும் கிரந்தங்களைப்படித்துத்.(வழக்குக்களைக் கண்ட புத்தகங்களைப் படித்துத்) தெரிந்துகொள்ளட்டும். இப்படியே அறிவில் இருக்கும் ஊனம் ஒவ்வொன்றுக்கும் தகுந்த சிகிச்சை நடத்தும் வழியுண்டு.

டி. ஆர். இராமநாத ஐயர்.

---

## கடவுளுண்மை.

(III-ஆம் சம்புடம். 273 ம் பக்கத்தொடர்ச்சி).

காலை யெழுந்து கடன்முடித்துக் கறைக்கண் டனைச்சிந் தனைசெய்து
வேலை சூழு முலகினுக்கு வேந்த னாகு மவன்பாற்போய்
நாலுங் கொண்டிம் மண்மிசைநீ நன்மந் திரியோ டிருந்துன்செங்
கோலைச் செலுத்து கெனச்சொன்னார் குறையிறவனு மிளயவனும்.(14)

சொல்லிச் சிறிது பொழுதிருந்து சொல்லற் கரிய மாதவத்தோன்
மெல்ல வரையன் முகநோக்கி மேற்செல் வதற்கெங் கட்குவிடை
பொல்லை யளித்தி யெனலுமவ னுதயத் தெழுந்து செலவுற்றீர்
பல்லும் விளக்கி யுள்ளீர்நீர் பாலுட் கொண்டு படர்கவென்றான். (15)

என்று கூறி யம்மன்ன னேவ லாளர் தமைக்கூவித்
துன்று சுவைப்பால் கொடுவந்தித் துறவி யோடவ் விளைஞனுக்கு
மன்ற வளித்தி ரெனலுமவர் மகிழ்வோ டோடி மனைப்புறம்போய்க்
கன்றி னாவைப் பால்கறந்து கலசத் திட்டுக் காய்ச்சினரால். (16)

மாற்றுத் தங்கத் தாற்செய்த வள்ள மதனிற் பாற்பெய்து
காற்றிற் கடுகிக் கமலவிலைப் புனலோர் முனிக்குங் காளையற்கு
மேற்றிற் பொலியு மிறையவனை யிதயத் திருத்தி யருந்துமெனப்
போற்றிச் சாலு மருந்தினராற் புகழ்சேர் முனியுங் காளையுமே. (17)

### வேறு.

பாலருந்தித் தவமுனியும் பாலபருவத்தினனுங்
காலையிருள் நீக்குங்காய் கதிரவன்மேல் வருவதன்மு
னாலயநீத் தனோடனிடஞ் செலவேற்றா ரப்போழ்து
சீலமுண்டைச் சிறுபையன் செங் * கோல்வள மொளித்திட்டான். (18)

அருந்தவனுந் தன்செய்கை யறிந்துமறி யான்போலப்
பொருந்துபல் வாசிகளைப் புரவலற்குப் புகன்றெழலும்
விருந்தினரை வழிவிடுவான் வெற்றிமிகு வேந்தனுந்தன்
திருந்தியசீர்த் தயங்குமணி வாயில்வரைச் சென்றனனால். (19)

மன்னவனே முதலாக மற்றுமுள வெல்லோரும்
பன்னரிய தவத்தினன்றன் பதமலரிற் டணிந்தெழுந்து
நன்னர்மிகுந் திருநீறு நன்களிக்கப் பெற்றாராய்ப்
பொன்னதனுற் செய்தவளம் போனவழி யவரறியார். (20)

அரவாசோ டெட்டிடமு மிளைப்பாற வரசியற்றும்
புரவலன்றன் பொன்வாயிற் புக்கதற்பின் னிருவோரும்
பெருகுவழி மேற்கொண்டார் பிற்படவப் பொன்வாயிற்
திருமருவுந் திருநாட்டின் வரைவிகுத்துச்செலவுற்றார். (21)

தூகவஞ் † சேர்ந் திசைசெய்யுஞ் சோலைகளுங் குளங்களுஞ்சேர்
பாதையிலே செலும்போழ்து பகலவனுச் சியிற்போத
வாதபத்தின் மிகையாலே யுடல்சோர வலைந்தலைந்தோர்
பாதவத்தி னிழலிலே படுத்துறங்கிச் செலநினைந்தார். (22)

நினைத்தாங்கே யொருமரத்தி னிழலிலே சிறிதுறங்கிப்
பனைத்தாவும் பொழுதிருக்கப் பன்கவணி யணிந்துபுரஞ்
சினத்தாலே சிரித்தெரித்த சிவபெருமான் றிருவடியை
யுனத்தாலே தொழுதபின ருடனெழுந்து செலவுற்றார். (23)

வண்டினங்க ளிசைபாடக் குயில்கூவ மயிலாலுந்
தண்டலைக ளெவர்நிலையுந் தனிக்கடந்தங் கோர்சீறூர்
ரண்டலும்வெங் கதிரவன்றன் ஞாழலை யாற்றிடுவான்
செண்டைகளார் மேற்கடலிற் றினைத்தனன்காண் கதிர்களொடும். (24)

(இன்னும்வரும்.)

சி. எஸ். சோக்கலிங்கம் பிள்ளை.

* செங்கோல்வளம்=பொன்வள்ளம், † தூதவம்=வண்டு.

# சாந்தி விலாசம்.

அறிவுறிற் கக்க லாம்பற் றனைத்தும்
நல்லறி வுற்றார்க் கில்சிறை யோப்பாம்.

21. மக்கள்கட னுதவியவ ரெனவென் முன்னம்
வருகின்றா ரிதுபொழுது மனைவி மார்கள்
புக்கரவம் பநிக்கையினி லடைந்த தொத்தார்
புரியில்லங் காவலறை போற்றோ ரின்றேன்
கக்கிபது நிகரிதிலோர் கணமே னுங்காற்
கணமேனும் வசிக்கமன நசையுற் றின்றா
லொக்கறமை யடுபகைஞர் படையிற் கண்டே
னூரந்தந்தாள் பரங்கருணை யுடைய தேவே.

மகவாற் றற்ற வந்தனன் றுறப்போன்.

22. நிலையுதலில் பாலியத்தால் யவனந் தன்னு
ணிகழ்ந்தன நிகழ்ந்தனவே தினங்கள் வீணைப்
தொலைந்தன தொலைந்தனவே யினிமே லில்லிற்
றனிக்கணமு முறத்தகுதி யிலையில் விட்டு
விலகுபவ னுக்கோரை நலமே னென்று
மிகவிவித நிச்சயத்தா லறிவுள் ளானு
யிலம்விடுத்துச் செல்பவனுங் கரும காரை
யினிதாற்றத் திரும்புகின்றான் கடிதி னன்றே.

அருளா னெறியுரை யவரினு முறவோர்
மறம்புரிந் தும்மடன் மதிக்க நினைப்பன்,

23. அந்தமறு யார்நமக்கு வியாசர் யாவ
ரணியாஞ்ஞ வற்கியர்யா ரவர்பா லர்க்குத்
தந்தைசொலல் போனமக்குப் பலகாற் சொற்றார்
தனிநலங்க ளலகிறயைக் கடலாய் லோக
சொந்தவுற வினராயன் னவர்க்காண் கின்றோந்
துகள்கொளமை வரைவிலிருள் வரையாப் பொல்லா
நிந்தைகளுக் குரியவராத் தெரிந்தோ மின்னு
நிலமதிக்க விரும்பினநம் மடமெக் காழ்த்தே.

இருளும் வெளுத்து மென்னகக் கருண்முன்,

24. மதிமயக்குந் தாமிசிர நரகத் துள்ள
மருட்குகையி லிருள்சக்ர வாளத் தப்பாற்

றாரையுமிருள் பாதலத்தி லிருள்பூ மீது
துவன்றியகார் காலவிரு ளான வெல்லாம்
பதியெனதந் தக்கரணத் தின்மு னல்லாய்ப்
பாவிக்கத் தக்கதன்றாய்ப் பணிசெய் யாளாங்
கதியுறற்குஞ் சுருதியின்றாய் விளங்கு மென்றன்
கருளொழிக்க வல்லவர்யார் கதியென் றேவே.

### விட்டவர் பற்றலேன் விடனோ யில்விடில்.

25. காமமிகுத் தவன்மேக விரணம் பெற்ற
சாலநசை மின்னாரைக் கைவிட் டப்பா
லாமயமெய் தியதெண்ணி யச்ச மெய்தா
தவர்கூட்டிற் றுய்க்கின்றா னிவிதங் காம
வேமநசை யுடையவருஞ் சிலநாட் போக
மிகந்திருப்ப ரீடணைகள் சுகமன் றென்று
தோமறவோர்ந் தொழித்தவரை விருப்ப மீர்க்கிற்
றன்னாகதி யென்னிடபத் தொளிர்மா தேவே.

### தீமையி லார்வஞ் சேற லுலகியல்.

26. நீதியினா லடைநிதியின் மறத்தா லுற்ற
நிதியுயர்வென் விதித்தவனந் தனினி டேதித்
தோதனமென் பயன்மனைவி போகந் தன்னி
லொளிகெடுக்கும் விலைமாத ரின்பென் மாட்சி
சாதமுறை சுருதிநிடே தித்த தான
தாழ்விடய மெலாமிந்த வுலகின் பத்திற்
கேதுவென வமைகின்ற தந்தோ தீய
தினிக்கின்ற தென்குறையீ திணையி லானே.

### நாத்திகனும்மலன் நகப்பொருள் புதைப்போன்.

27. ஆத்திகனேற் பயன்சுருதிப் பொருள்க ளெல்லா
மடைந்திரப்ப வர்க்களிக்கத் தக்க தன்றி
நாத்திகனே லுலகசுக நிமித்தம் வவ்வி
நனிச்செலவு செயத்தக்க தங்ங னின்றி
எத்ததனைப் புதைத்துவருந் தக்காத் தற்கென்
னேதுவென்ன வாராய்ந்து நுணுகியுள்ளிப்
பார்த்துமறிந் திலன்றீய நசையஞ் ஞானப்
* படுவருந்தும் பலன்சொலெழிற் பரம தேவே.

---

* படு = கள்.

அலாத தழுகேன் றணைவன் மயக்கான்.

28. அணுய்வா னுனிக்கோண றன்னைப் பன்றி
யகட்டினதி பருமனைவெங் குரங்கு மேவி
மாணுத பல்விழிப்பைக் கழுதை யாரும்
மனம்வெறுக்குங் கொடுந்தொனியை மனிதன் வீங்கிப்
பூணுகச் சடிப்புகளைப் பெட்டை யின்பாற்
பொருந்திடக்கண் டிச்சைகொடு புணரு மஃது
கோணீடு மஃதஃதி னன்னை யன்றிக்
குழசெஃதென் றஃதில்லார் குறிப்பர் தேவே.

மதன்பித் தேற்றன் மதித்தும் வேறேனே.

29. சுகந்துய்க்கச் சென்றவனு யகி * துண் டத்தைத்
துனிப்பல்லாற் கடிப்பனெனி லனமார் தற்குப்
புகுந்தொருவன் படைப்பவன்ற னுனிக்கை தன்னைப்
புரிந்து † கறித் திடிற்குறையென் னிந்த வாறு
சகத்திலுள மூடரைமன் மதன்பித் தாக்குந்
தசையிவணம் வெளிப்பட்டு மதனை யெள்ளி
மிசத்துறக்க வெனினுமதை யுன்னி மெய்யாய்
வெட்கமுற வேனும்வலி யுற்றி லேனே.

(இன்னும்வரும்)

விருதை - சிவஞானயோகி.

---

## குயில்.

---

மாம ரக்கிளை தம்மின் மகிழ்ந்துவாழ்
கோம ளக்குயி லேயிசை கூவுவாய்
சாமி தந்த தனிக்குரல் காட்டினுற்
றீமை யொன்றுள தோவினிச் செப்புவாய். (1)

மன்னி யோங்கும் வசந்தமும் வந்தது
மின்னி யெங்கு மலர்கள் விரிந்தன
வின்னி சைக்குயி லேயினிக் காட்டுவாய்
பொன்ன நாடுடை யார்புகழ் கீதமே. (2)

---

* துண்டம்—முகம். † சறித்தல்—கடித்தல்.

மேகம் வானி லதிர்ந்து வெடிக்கவும்
வேக மாயிவண் விட்டு விலகிடுங்
கோகி லப்பெடை யேயிசை கூவுவாய்
மோக மண்ணினும் விண்ணினு மூடவே. (3)

மந்த மாருதம் வந்து தவழ்மலர்க்
கந்தம் வீசுநற் காவினின் மாமரஞ்
சொந்த மாகத் துணையொடும் வாழிசை
யந்த மாங்குயி லன்புடன் பாடுவாய். (4)

வசந்த கால மகிழ்ந்திசை பாடுவாய்
சசந்து மாரி தனிற்குரல் காட்டிலாய்
வசந்தம் வாடி மழைமகிழ் வாய்ந்திடும்
பசந்த தோகை மயிலுன் பகைகொலோ ? (5)

மலர்ம ணந்த மரங்கள் கனீர்விட
வலரி னந்தழை யன்பிற் சதித்திடுங்
குலவு பூங்குயி லேகொடு மாரியி
னிலகு லைந்தவ ணின்றனை சாற்றுவாய். (6)

மாம ரந்தளிர் விட்டு மலர்ந்திடத்
தேமொ ழிக்குயி லேகினைத் தேடினேன்
பூம ணத்துடன் போதருந் தென்றல்சேர்
காம ரத்திடைக் கண்டு மகிழ்ந்தனென். (7)

வேறு.

தூகலை யின்னிசைக் கோகில மேநின திசைபோ
லிதழ்கு வித்தொலி செய்தனெ னென்பதோர் மயிலின்
சதியைக் கண்ணுற்றுத் தானுந்தன் றோகையை விரித்துக்
குதிகொண் டாடும்வான் கோழியின் செய்கையைக் குறிக்கும். (8)

உன்றன் மாளிகை யுயர்பெரும் பசுமர முனக்குத்
தென்ற லோடுமா காயமே சிறந்ததோர் வழியா
மென்று மாரியில் லாதவோர் காலமே காலம்
நன்று நன்றுவாழ் நாளுனைப் போலநான் பெறினே. (9)

ந. பலராம ஐயர்.

## சமாசாரக் குறிப்புக்கள்.

**விகாரி-சார்வரி வருஷத்திய பஞ்சம்:**—பாரதக்கதையில் பன்னிரண்டு வருஷத்திய பஞ்சமொன்றிருந்ததாகக் கேள்வியுற்றிருக்கிறோம். இது கதையிலுள்ளது. சென்ற தாது வருஷத்தில் வந்தபஞ்சம் தென்னிந்தியாவில் உள்ளாரனைவர்க்குந் தெரிந்த விஷயமே. சென்ற இரண்டு வருஷமாக இருக்கும் பஞ்சமோ அதைப்பார்க்கிலும் அதிகமாகப் பரவியும் மிக்க கோரமுள்ளதாயு மிருக்கிறது. இந்தியாவிலிருக்கிற ஜனத்தொகை 38-கோடி, அதில் ஐந்தில் நாலுபங்கு ஜனங்கள் வியவசாயத்தையே நம்பி ஜீவிக்கிறார்கள். வியவசாயத்திற்கோ வருண பகவானுடைய தயவில்லாவிட்டால் ஒன்றும் முடியாது. இப்போது இந்தியாவில் மழைபெய்யும் மாதமோ இரண்டொன்றுதான். மற்ற மாதங்களிலெல்லாம் வெயில் மிகுதியாகவே யிருக்கிறது. பருவமழை யில்லாவிட்டால் வறட்சிமேலிட்டு செய்தமாசூல்களெல்லாம் தன்னிலைமைகுன்றுவதனால் முடிவில் ஆகவேண்டிய உடவாரங்குறைந்துவிடுகிறது. அநேக விடங்களில் மாசூல் சாவியாய்க் குறைந்த பலன் உண்டாகிறது, அடியோடே ஒன்றுமில்லாமலும் போகிறது. கூலிக்கு வேலை செய்பவர்களுக்கும் வேலைக்கிடமில்லாம லிருக்கிறது. இவ்வருஷத்திய பஞ்சமானது 4-லக்ஷத்து இருப்பதினாயிரம் சதுரமைல் பரப்பிலுள்ள ஜனங்களைப் பீடித்திருக்கிறது. 60-லக்ஷம் ஜனங்கள் பஞ்சத்தில் வருந்துகிறார்கள். இவர்களில் கொஞ்சம் திடமுள்ளவர்கள் ரிலீபுவேலை செய்து பிழைக்கிறார்கள். அந்த வேலை செய்வதற்குஞ் சக்தி யில்லாதவர்களுக்குக் கவர்ன்மெண்டாரும் இந்தியாவிலுள்ள பற்பல சுதேச ராஜாக்களும் இன்னும் உதாரகுணமுள்ள தனவான்களும் பணமென்பதைப் பாராது அலமந்துழலுமுயிரைக் காப்பாற்றுவதே தங்கடமையெனக் கொண்டு அன்னவஸ்திர முதலியன கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு நாமெல்லோரும் நன்றியுடையவர்களா யிருத்தல்வேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார்மட்டும் 15-கோடி ரூபா இதற்கென்று பிரித்து வைத்திருக்கிறார்களாம். இந்தியாவி லுள்ளவர்களன்றியும், இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா இன்னும் பற்பல தேசங்களில் இந்தப் பஞ்சத்தின் கொடுமையைக் கேட்டவர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் இயன்றவளவு கொடுத்துச்சேர்ந்த தொகையை வைசிராய் துரையவர்களுக்கு அனுப்புவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் கப்பல் கப்பலாய் அரிசியும் அனுப்புகிறார்கள். இதுவரையில் இதைத்தவிர 124-லக்ஷம் ரூபாய் செலவாயிருக்கிறது. பஞ்சத்தின் கொடுமையோ பார்ப்பதற்குங் கேட்பதற்கும் பயங்கரமாயிருக்கிறது. சர்வஜீவ தயாபரக் கடவுளோ இதினின்றும் ஜனங்களைக்காத்துக் கூடியசீக்கிரத்தில் தக்கமழை பெய்யச்செய்து ஸுபிக்ஷம் வருவிக்கும்படி பிரார்த்திக்கின்றோம்.

இத்தாலியா தேசத்தரசன் அவ்விடத்திலிருக்கும் ஒரு பெண் கல்விச்சாலை வருஷாந்திர வெகுமானக்கொடை கொடுத்துத் தன் அரண்மனைக்குத் திரும்புஞ் சமயத்தில் கொலையாளி யொருவனால் திடீரென்று கொல்லப்பட்டான். "குடியரசே யெங்குமிருக்க வேண்டும், அரசர்களிருந்து அரசுசெலுத்தவே கூடாது" என்னும் எண்ணமுடைய கூட்டத்தாருடைய தூண்டுதலின்பேரில் இது நடந்ததாகத் தெரியவருகிறது.

***

**சென்னை கவர்னர்:**—இப்போதிருக்கும் கவர்னர் (Sir Arthur Havelock) **ஸர் ஆர்த்தர் ஹாவ்லக்** துரையவர்கள் இந்த இராஜதானியிலிருக்க வேண்டிய ஐந்து வருஷம் வருகிற மார்ச்சுமீ 18உயோடே முடிவாகிறது. இவர்க்குப் பிறகு வரவேண்டிய கவர்னரும் நியமித்தாய் விட்டது. அவர் பெயர் லார்ட் ஆம்டில் (Lord Amphthili) இப்போதிருப்பவர் ஜனங்களிடத்தில் அதிகவிசுவாசமும் அன்பும்வைத்து வேண்டியவைகளைத் தேர்ந்து செய்துவருகிறார். ஜனங்களும் இவரிடம் அதிக கௌரவமும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள். இவருக்குப் பிறகு வருகிறவரும் ஜனங்களுடைய குறைகளை விசாரித்து அவர்களுடைய சௌக்கியத்திற்குரிய ஏற்பாடுகள் செய்வாரென்றெதிர்பார்த்திருக்கின்றோம்.

***

சென்ற சில நாளாக மழை பெய்துகொண்டு வருகிறது. பஞ்சத்தினால் வருந்தி வடக்கேயுள்ள நாடுகளிலும் இம்மழையுண்டெனத் தெரியவருகிறது. மழை வேண்டுமளவு பெய்து ஏரி, குளம், குட்டை, மடுவு, ஆறு இவைகளில் ஜலம் பூர்ணமாய் கொஞ்ச நாளைக்குள் நாடுகளெல்லாம் நன்றாகும். அசுத்தமாகிய பதார்த்தங்களையும் இன்னும் வேண்டாதன யாவையும் பற்பல ஆறுகள் அடித்துக்கொண்டு போய் சமுத்திரத்தில் தள்ளுவதுபோற் இப்பஞ்சத்தினையும் இப்போது பெய்துவரும்மழை கடலிற் கொண்டுய்க்குமென்றெண்ணுகிறோம். கூடிய சீக்கிரத்தில் பஞ்சப் பிராஞ்சியத்திலிருக்கும் வார்திபேதியின் வாயு மடங்கிப்போய்விடும்.

***

சைனா யுத்தத்திற்குப்போன கப்பல்களில் ஒரு கப்பலுக்குரிய செலவை **சிந்தியா மகாராஜா** தான் கொடுப்பதாய் ஏற்றுக்கொண்டார். அது வைத்தியசாலைக்கப்பல். இதன் பட்டுபடி 20 - இலக்ஷம் ரூபாய். இதில் இருந்த உதாரத்துவகுணம் இந்தியாவைப் பீடிக்கும் பஞ்சத்தினால் வருந்தும் ஜனங்களிடத்திலேயே யென்னும் ஏக்கம் எல்லாரிடத்தும் இருக்கிறது. மகாராஜாவினிட மிருக்கும் ஏராளமான பொருளில் இத்தருணத்தில் பஞ்சத்தின் பொருட்டும் இருபது லக்ஷம் ரூபா கொடுப்பதனால் அவர் செல்வத்திற்குக் குறைவு நேரிடாதென்றும் அப்படியே கொடுப்பார் என்பதும் இந்தியர் ஐரோப்பியர் என்னும் இவர்களுடைய கோரிக்கை. இதைச்சீக்கிரம் பூர்த்தி செய்வாரென நம்புகிறோம்.